

# மருதம்

போரதீவுப் பற்று பிரதேச
கலாசார விழா சிறப்பு மலர்–2016

வெளியீடு

**கலாசாரப் பேரவை**
பிரதேச செயலகம்,
போரதீவுப் பற்று,
வெல்லாவெளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதம்

போரதீவுப் பற்று பிரதேச
கலாசார விழா சிறப்பு மலர்—2016

**"தமிழர்தம் கலைகள் யாவும்
தரணியில் மிளிரச் செய்வோம்"**

வெளியீடு

**கலாசாரப் பேரவை**
**பிரதேச செயலகம்,**
**போரதீவுப் பற்று,**
**வெல்லாவெளி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதம்

போரதீவுப் பற்று பிரதேச
கலாசார விழா சிறப்பு மலர்-2016


## நூல் தரவு:

| | | |
|---|---|---|
| பெயர் | : | " மருதம் " |
| வகை | : | கலை, இலக்கிய சிறப்பு மலர். |
| வெளியீடு | : | கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், போரதீவுப் பற்று. |
| பதிப்பு | : | 2017 |
| பக்கங்கள் | : | 48 |
| பிரதிகள் | : | 250 |
| அச்சுப்பதிப்பு | : | மாருதி அச்சகம், களுதாவளை. |


**பொருளடக்கம் :** பக்கம்


வாழ்த்துச் செய்தி, முகவுரை i, ii
போரதீவுப் பற்று கலாசாரப் பேரவை 01
தமிழ் மொழி வாழ்த்து 03
போரதீவுப்பற்று கலாசார கீதம் 04
போசாக்கான உணவை உட்கொள்வோம் 06
தொலைந்துவிட்ட வாசிப்பு 08
பொலித்தீனால் ஏற்படும் நன்மைகளும் தீமைகளும் 09
நாமகள் வேண்டலில் நான்முகன் படைத்திட்ட விபுலானந்தன் 11
உணவிடும் உழவினைத் தள்ளி 14
பல பிழைகள் மலிந்து போச்சு - 15
தொலைக்காட்சியின் நன்மை தீமைகள் 17
மனிதன் கேட்க மனிதனால் ஈந்த மறை 20
ஏற்றமுடன் வாழ்வாயடா 23
நூலகத்தின் பயன்பாடு 24
வகுப்பறையில் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்..... 25
கோவில் போரதீவு கண்ணகி அம்மன் ஆலய உற்சவம் 29
இலங்கையில் மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கும்... 31
மாலையானால் வருகிறாய் 35
முதியோரைப் பேணுவோம் 36
சடங்குகளும் சம்பிரதாயங்களும் 37
வாசிப்பே மனிதனின் சுவாசிப்பு 42


**(ஆக்கங்களிலுள்ள கருத்துகளுக்கு ஆக்கியோரே பொறுப்பாகும்)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள் என்பன ஓர் சமுதாயத்தின் நிலவுகைக்கு அவசியமான காரணிகளாகும். அவற்றின் எழுச்சி அச் சமுதாயத்தின் எழுச்சிக்கும்; வீழ்ச்சி அச்சமுதாயத்தின் வீழ்ச்சிக்கும் அடிகோலாய் அமைந்துவிடும். ஆகவே, கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை பாதுகாத்து பராமரிக்கவேண்டியது நம் ஒவ்வொருவரினதும் தார்மீகப் பொறுப்பாகின்றது.

போரதீவுப்பற்று பிரதேசமெங்கும் கலை உயிரோடிக் கொண்டு இருக்கின்றது. இங்கு வாழும் மக்களின் வாழ்வியலோடு கலை மற்றும் பண்பாட்டு விழுமியங்கள் இரண்டறக் கலந்திருக்கின்றன. இயற்கை எழில் கொஞ்சும் சூழலும் இனிய பண்பாட்டு மரபுகளும் இம்மண்ணில் நிலைத்திருப்பதனால் பல்துறைசார் கலைஞர்களும் இங்கு நிறைந்திருக்கின்றார்கள்.

போரதீவுப்பற்று கலாசாரப் பேரவையினால் நிகழ்த்தப்படும் கலாசார விழாவும் "மருதம்" மலரும் இம் மண்ணின் மாண்பினையும் கலைஞர்களின் சிறப்பினையும் வெளிக்கொணர்கின்ற கைங்கரியத்தை செய்கின்றன. இவ் வகையில் பல்வேறு காரணங்களால் தடைப்பட்டிருந்த 2016ஆம் ஆண்டின் மருதம் மலரினை வெளியிடுவதற்கு தலைமைத்துவமேற்று நிற்கும் பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி அம்மணி அவர்களுக்கும் கலாசார பேரவை உறுப்பினர்களுக்கும் கலாசார உத்தியோகஸ்தர் மற்றும் மலர்க் குழுவினர்களுக்கும் மலருக்கான ஆக்கங்களை படைத்த படைப்பாளிகளுக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மனமகிழ்ச்சியடைகின்றேன்.

திரு. சி. புவனேந்திரன்
உதவி பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம்,
போரதீவுப் பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

ஒரு பிரதேசத்தின் கலை அம்சங்களையும் அப் பிரதேசத்தின் பண்பாட்டு வசதிகளையும் வெளியுலகிற்கு எடுத்துக் காட்டும் ஒரு நிகழ்வாகவே கலாசார விழாவினை பார்க்கின்றோம். இவ் விழாவின்போது கலைக்காக தம்மை அர்ப்பணித்த மூத்த கலைஞர்களை பாராட்டி கௌரவப்படுத்தும் அப் பிரதேசத்தின் கலைப்பண்பாட்டு விழுமியங்களை ஆவணப்படுத்தும் பொக்கிஷமாக மருதம் நூல் வெளியீடு அமைவது சிறப்புத்தன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறான கலை இலக்கிய விழாக்கள் பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய ரீதியாக இடம் பெற்று; கலைஞர் கௌரவம், நூல் வெளியீடு என்பன உள்ளடங்கலாக சிறப்பாக நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது.

இந்த அடிப்படையிலேதான் எமது பிரதேசத்தில் இவ்விழா மேற்போத்த அம்சங்களுடன் எடுக்கப்படுவது சிறப்புக்குரிய அம்சமாகும். இதற்கும் மேலாக ஒரே விழாவில் தொடர்ந்து வந்த ஆண்டுகளின் மூன்று "மருதம்" மலர் வெளியிடுவது அதிலும் மெருகூட்டுவதாக அமைகின்றது.

இதில் 2015ஆம் ஆண்டு வெளிவரும் நூல் சற்று விசேடமான அம்சங்களை கொண்டிருப்பது இம் மருதம் இதழுக்கு கிடைத்த தனிச்சிறப்பாகும். இம் மலரில் அனேக கட்டுரைகள் ஆய்வு விடயமாகவேதான் இடம் பெற்றிருப்பது முக்கியமானதாகும். பேராசிரியர் பத்மநாதன், வெல்லவூர் கோபால் போன்ற ஆய்வாளர்கள் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வுக்கட்டுரைகள் எழுதியிருப்பது இம் மலரின் மதிப்பை உயர்த்துவதாக அமைகின்றது. இது ஆய்வாளர்களுக்கு துணை புரியும் என நம்புகின்றேன்.

2016 ஆம் ஆண்டுக்குரிய இம் மலர் ஒரு ஆய்வு நூலாக அமைய வேண்டும் என உயரிய நோக்கம் கொண்டவர் திரு. நல்லையா வில்வரெத்னம் பிரதேச செயலாளர் அவர்கள். இதற்காக இவை சம்பந்தமான தகவல்களை திரட்டுவதற்கு எமக்கு ஆலோசனை வழங்குவதில் பக்க பலமாக இருந்தார். எனவே அவரை இவ்விடத்தில் நினைவு கூருவது அவசியமாகும். அதற்காக அவருக்கு நன்றியும் கூற கடமைப்பட்டுள்ளோம். எனவே மலரினை வெளியிடுவதற்கு விரைவான சந்தர்ப் பத்தினை ஏற்படுத்தித்தந்த தற்போது கடமை புரியும் பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி அம்மையார் அவர்களையும் நன்றியுடன் நினைவு கூருவது எமது கடமையாக உள்ளது.

எனவே இம் மலரில் வரும் ஆக்கங்கள் அனைத்தும் வாசகர்கள் உள்ளத்தை தொட்டு மிளிரும் எனவும் எதிர்பார்த்து ஆய்வினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு மிகவும் துணைபுரியும் என்ற நம்பிக்கையுடன் எதிர் பார்த்து நிற்கின்றோம்.

நன்றி

**திரு.ச.சோமசுந்தரம்**

(கலாசார உத்தியோகஸ்தர், கலாசார பேரவை செயலாளர்),
போரதீவுப் பற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரதீவுப் பற்று பிரதேச கலாசாரப் பேரவை

தலைவர் : ஆர். ராகுலநாயகி (பிரதேச செயலாளர், போரதீவுப் பற்று)

உப தலைவர் : திரு.சி. புவனேந்திரன் (உதவி பிரதேச செயலாளர், போரதீவுப் பற்று)

செயலாளர் : திரு. ச.சோமசுந்தரம் (கலாசார உத்தியோகஸ்தர், போரதீவுப் பற்று)

பொருளாளர் : திரு.வ.நாகேஸ்வரன் (கணக்காளர், போரதீவுப் பற்று)

உப செயலாளர்: திரு. ச.கணேசமூர்த்தி (அதிபர், மட்/பட்/வெல்லாவெளி கலைமகள் வித்.)

## உறுப்பினர்கள்:

திரு.ஆ.மு.சி.வேலழகன் (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.க.தணிகாசலம் (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.சு.உதயகுமார் (அதிபர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.ஆ.புட்கரன் (அதிபர், கலாசார பேரவை உறுப்பினர்)

திருமதி.மலர் சிவராசா (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.க.சோமசுந்தரம் (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.ஏ.எம்.சமரசேகர (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.க.மகாலிங்கம் (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.இ.விநாயகம் (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.பெ.உதயகுமார் (அபிவிருத்தி உத்தியோகஸ்தர, கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.ஆர்.மயூரன் (கிராம சேவை உத்தியோகஸ்தர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.இ.கலைச்செல்வன் (அபிவிருத்தி இணைப்பாளர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.தே.நடராசா (கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.த.சேரலாதன் (ஆசிரியர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.த.ரமீஸ்குமார் (ஆசிரியர், கலாசார பேரவை உறுப்பினர்)

திருமதி. ம.பக்தகௌரி (கலாசார அபிவிருத்தி உத்தி., கலாசார பேரவை உறுப்பினர்)

செல்வி சி.உதயமலர் (கலாசார அபிவிருத்தி உத்தி., கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.எஸ்.நாகேந்திரன் (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.க. சுந்தரம்பிள்ளை (கலாசார பேரவை உறுப்பினர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க்குழு:

திரு. ச.சோமசுந்தரம் (கலாசார உத்தியோகஸ்தர், கலாசார பேரவை செயலாளர்)

திரு.க.கணேசமூர்த்தி (அதிபர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.ஆ.புட்கரன் (அதிபர், கலாசார பேரவை உறுப்பினர்)

திருமதி.மலர் சிவராசா (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.இ.கலைச்செல்வன் (அபிவிருத்தி இணைப்பாளர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.தே.நடராசா (கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.த.சேரலாதன் (ஆசிரியர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.த.ரமீஸ்குமார் (ஆசிரியர், கலாசார பேரவை உறுப்பினர்)

திருமதி.ம.பத்தகௌரி (கலாசார அபிவிருத்தி உத்தியோகஸ்தர், கலாசார பேரவை உறுப்பினர்)

## நிகழ்ச்சிக்குழு:

திரு. க.தணிகாசலம் (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.சு.உதயகுமார் (அதிபர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.இ.விநாயகம் (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.பெ.உதயகுமார் (கலாசார பேரவை உறுப்பினர்)

செல்வி.சி.உதயமலர் (கலாசார அபிவிருத்தி உத்தியோகஸ்தர், கலாசார பேரவை உறுப்பினர்)

## நிதிக்குழு:

திரு.வ.நாகேஸ்வரன் (கணக்காளர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு. ச.சோமசுந்தரம் (கலாசார உத்தியோகஸ்தர், கலாசார பேரவை செயலாளர்)

திரு.தே.நடராசா (கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.ச.கணேசமூர்த்தி (அதிபர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.இ.கலைச்செல்வன் (அபிவிருத்தி இணைப்பாளர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.எஸ்.நாகேந்திரன் (கலாசார பேரவை உறுப்பினர்)

விழா மேற்பார்வை : ஆர். ராகுலநாயகி (பிரதேச செயலாளர்,
போரதீவுப் பற்று)

விழா இணைப்பாளர்: ச.சோமசுந்தரம் (கலாசார உத்தியோகஸ்தர்,
போரதீவுப் பற்று.)

விடய உதவியாளர் : வனிதா ஜெயராஜா (அபிவிருத்தி உத்தியோகஸ்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்து மளந்திடு
வன்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி யோங்க
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வான மளந்த தனைத்தும் அறிந்திடு
வளர்மொழி வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரதீவுப் பற்று கலாசார கீதம்

**பல்லவி**

ஆடுவோமே கவி பாடுவோமே
ஆனந்தம் கொண்டோமென்று கூடுவோமே
தேடுவோமே செல்வம் அனைத்தும் பெற்று
சீரான வாழ்வினை நாடுவோமே

**சரணங்கள்**

போரதீவுப் பற்றென்னும் பொன்னான நாட்டினை
போற்றி நிற்போம் என்றும் நாமே
சீரான திருத்தலங்கள் நிறைந்ததெம்
செல்வத் திருநாடே என்போம்

நீர்வளம் நிலவளம் நிறைந்த பிரிவிது
நெல்வயல் நீர்குளம் மலிந்ததன்றோ!
சீர்பெறும் கவிமான்களும் கவிஞர்
பெருமக்கள் செல்வம் உடையதன்றோ!

எங்கும் நிறைந்த மருத நிலத்தினில்
இடையிடையே மக்கள் வாழ்விடமாம்
பங்கமில்லாப் புகழ் பழுகாமம் தன்னிலே
பாங்குடன் அமர்ந்துள்ளாள் துரோபதைத்தாய்

போரதீவெனும் பேரூர் அதனிலே
பிரியமாய் அமர்ந்துள்ளாள் காளியம்மாள்
அரிய புகழ் முனைத் தீவதன் பக்கலிலே
அமர்ந்து வினாயகர் அருள் பெறுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைப் புகழ்பெறு பைந்தமிழ்க் காவலன்
பார்புகழ் முருகேசன் வாழ்விடமாம்
மண்டூர் எனுந்தலம் மண்ணுள்ளோர் யாவரும்
வந்து தரிசனம் செய்திடுவர்.


கோயில் போரதீவு எனும் பதியிலே
கோவில் கொண்டிருப்பவன் முருகன்
தாவில் வெல்லாவெளித் தலத்தினில் மாரித்தாய்
அருள் பாலிக்கின்றார் அறிந்திடுவீர்

திக்கோடை தும்பங்கேணிக் கிராமங்கள் தோறும்
தெய்வத் திருவருள் பெற்று
மிக்கதோர் கிராமிய கலைகளும் அங்கே
மேம்பட்டு நிற்பதை மதிப்போமே

எங்கள் கிராமங்கள் அனைத்திலும் தமிழர்தம்
இன்தமிழ் செல்வங்கள் நிறைந்து
மங்கலமான நல் நாட்டுக் கூத்துடன்
நாடகம் கும்மி கோலாட்டம்

கரக ஆட்டம் கொம்பு முறித்தல்
குரவை ஒலியுடன் பெண்களின் கூட்டம்
பரமனருள் பெற்ற போரதீவுப் பற்று
பாரினில் வாழிய வாழியவே

வாழியவே! வாழியவே! வாழியவே!
வாழியவே! வாழியவே! வாழியவே!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போசாக்கான உணவை உட்கொள்வோம்

மனிதன் உண்ணும் உணவின் மூலமே போசாக்கு கிடைக்கின்றது. ஆனால் இப்போது மனிதனால் உட்கொள்ளப்படும் எந்தவொரு உணவிலும் போசாக்கை விட நோய்க்காரணிகள் அதிகம் காணப்படுகின்றன. நாம் நிறையுணவை உட்கொள்ளும் போது எமது உடலிலே நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகின்றது. பண்டைய காலத்தில் எம் முன்னோர்களால் உட் கொள்ளப்பட்டுவந்த உணவு நிறையுணவாகவும் அதே நேரத்தில் போசாக்கானதாகவும் காணப்பட்டது. இதனாலேயே அவர்களது உடல் எந்தவொரு நோயுமின்றி ஆரோக்கியமாக இருந்தது.

ஆனால் தற்போது எமது நாட்டில் உணவுப்பழக்க வழக்கங்கள் மாற்றமடைந்து கொண்டு வருகின்றன. கண்ணைக்கவர்வதாகவும் பார்ப்பதற்கு மிக அழகாகவும் சுவாசத்திற்கு நல்ல நறுமணமாகவும் கண்டவுனேயே உட்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை எழுகின்றது. இவ்வாறு காட்சி அளிக்கும் உணவுகள் நமது பாமர மக்களின் உணவுகள் அல்ல. இவை வெளிநாட்டு உணவுவகைகள் ஆகும்.

சிறுவர்களுக்கு உணவு பழக்க வழக்கங்கள் சற்று வித்தியாசமானதாக இருக்க வேண்டும். கல்வி அறிவூட்டலுக்கான ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்ள கொடுக்க வேண்டும். ஆனால் இவ்வுணவுகளை தவிர்த்து வேறு உணவுகளையே உட்கொள்கின்றனர். அதற்கு காரணம் அவர்களது தாய்



தந்தையரே. அவர்களால் வழங்கப்படும் உணவையே சிறுவர்களால் உட்கொள்ள முடியும்.

தற்போது பிறக்கின்ற குழந்தைக்கு ஆறு மாதத்தில் இருந்து உணவு ஊட்டப்படுகின்றது. ஆனால் தற்போது உள்ள காய்கறிவகைகளோ நச்சுத்தன்மையானவை. இதனை நாம் உண்பதோடு நாம் சிறுவர்களுக்கும் ஊட்டுகின்றோம். இதனால் அவ் உணவில் கிடைக்கின்ற போசாக்கு குறைவாகவும் நோய்க் காரணிகள் அதிகமாகவும் காணப் படுகின்றது.

இதற்கு முழுக்காரணமும் மனிதனது உணவு பழக்க வழக்கங்களே ஆகும். அவனது ஆடம்பர வாழ்வினால் உணவுப் பழக்கங்கள் மாற்றம் அடைகின்றன. இதனால் பாதிக்கப்படுவது அவன்தான் என்பதை உணர்வதில்லை. அவன் தன்னிடம் உள்ள பணத்தை வைத்து கண்களை கவரும் கடையுணவு வகைகளையே உட்கொள்ள மிகவும் விரும்புகின்றான். இவ்வாறான பழக்கத்தைக் கொண்டவன் இவ்வுணவை ஆரோக்கியமானதென்று நினைத்துக் கொள்வான். நிச்சயமாக அவ்வுணவுப் பழக்கம் தவறானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் நகர்ப் புறங்களுக்கும் கிராமப்புறங்களும் வித்தியாசம் காணப் படுகின்றது. கிராமப் புறத்தில் உள்ள மக்கள் வீட்டிலேயே சமைத்து உண்ணுகின்றனர். அவர்கள் பண்டைய உணவு வகைகளை அதிகம் விரும்பி உட்கொள்கின்றனர். ஆனால் நகர்ப்புறங்களில் உள்ள மக்களிடம் பாமர உணவுவகைகள் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வருவது காணப்படுகின்றது. அவர்கள் அதிகம் வெளிநாட்டு உணவுகளேயே விரும்பு கின்றனர். அதிகமாக இரும்புச் சத்து நிறைந்த கீரை வகைகளை உண்ணும் போது அது நிறையுணவாகவும் போசாக் கானதாகவும் உடல் ஆரோக்கியமான தாகவும் காணப்படும்.


நாம் வீட்டில் தயாரித்துக் கொள்ளும் உணவு போசாக்கானதாக இருக்கும். ஆனால் கடைகளில் தயாரிக்கப் படும் உணவானது துரிதமாவும் பார்ப்பதற்கு மிக அழகு நிறைந்த உணவாகவும் காணப் படுகின்றது. இவ்வாறான உணவை நாம் உண்ணும் போது எம்மோடு சேர்ந்து சிறுவர்களும் உண்ணுகின்றனர். இதனால் சிறுவர்கள் பெரியவர்கள் ஆன பின்பும் இந்த உணவுகளையே விரும்புகின்றனர். இதனாலேயே இவ் உணவுகள் முக்கிய இடம் பெறுகின்றது.

காய் கறிகளுக்கு விசிறப்படும் கிருமிநாசினி வகைகள் நாம் அதை சமைத்து உண்ணும் போது அது எமது உடலிலேயே சென்றடைகின்றன. எந்த வொரு உணவை உண்டாலும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாகவே காணப் படுகின்றது.

எது எவ்வாறு இருந்தாலும் மக்கள் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். நாம் உட் கொள்ளும் உணவு தரமானதாகவும், ஆரோக்கியமானதாகவும் தூய்மையான தாகவும் அதே நேரத்தில் போசாக்கு நிறைந்த உணவாகவும் இருக்க வேண்டும். சிறுவர்களுக்குத் தேவையான உணவினை வீட்டிலே தயாரித்து கொடுக்க வேண்டும்.

மனிதன் நீண்ட காலம் உயிர் வாழ வேண்டுமானால் போசாக்கான உணவுகளை உட்கொள்வது சாலச் சிறந்தது.

"விருந்தே ஆயினும் மருந்தோடு உண்"



**த.தனுசாயினி**
க.பொ.த (சா.தரம்)
மட்/பட்/கணேஷா வித்தியாலயம், தம்பலவத்தை, மண்டூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைந்து விட்ட வாசிப்பு...!

வண்ணங் கொண்ட
வாழ்வில் துரிதமெனும்
வரியில் எம்மிதய
தூரிகையாய் நிற்கும்
வாசிப்பை தொலைத்து
விட்டோம்......

தொலைந்தது என்னமோ
வாசிப்பை ஆனால் இழந்ததோ
பல நூறு இருப்புக்கள்
வேப்ப மரத்தடியில் வேகமாக
வாசித்து நாட்டு நடப்பின்
நாகரீகங்கள் அரசியலின்
அன்றாடம் வானுலகின்
கோலங்கள் எனப் பார்த்துப்
பார்த்து நின்ற நம் தனித்துவம்
இன்று தொலைந்து விட்டதே.

வாசிக்கத் தெரியாத போது
இடறி இடறி போடியார் மாமா
வாசிக்கக் கேட்டிருந்த
சுவாரசியமான அந்தக் காலங்களைத் தான்
மறந்திட முடியுமோ?

தமிழர்களின் கையிருப்பே
கல்வியல்லவா அதனைத்
தக்க வைக்க நம்மவர்
பட்டதை மறந்தல்லவா
விட்டனர் இன்றைய இளைஞர்கள் ....

வாசிக்க வாசிக்க யோசிக்க
முடியும் நம் இன்றைய நிலையின்
இழிவை....
வாசிப்பைத் தொலைத்தோம்
வழியின்றித் தத்தளிக்கின்றோம்
நம் இனத்தின் விடிவுக்காக
இளைஞனே விழித்தெழுந்து
வாசி நேசி....

பூந்தளிர் வாசம் மெல்ல மெல்லப்
பூலோகம் பரவி நிற்கும்
பூவையர் சூடிய பூவின் வாசமோ
அன்பில் கலந்த அயலவருக்குள் மட்டும்
செறிந்து நிற்கும்

வாசிப்பின் வாசமோ உன்
புகழை வானெங்கும்
பரவி நின்று
உனது இனத்தையே
விடியச் செய்து விடும்
வாசி ..... வாசி..... வாசி ...
தொலைந்து விட்ட நம்
வாசிப்பை



**திருமதி.ம.ஜெயதீஸ்வரன்**
கூழாவடி, பாலையடிவட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலித்தீனால் ஏற்படும் நன்மைகளும் தீமைகளும்

நிமல் : வசந் தனியாக இருந்து கொண்டு இயற்கையை ரசிக்கின்றீர்களா?

வசந் : அப்படி ஒன்றுமில்லை.

நிமல் : அப்படி ஒன்றும் இல்லை என்றால் எதைப்பற்றி யோசித்துக் கோண்டு இருக்கின்றீர்கள்

வசந் : நாம் வாழ்கின்ற சூழல் எதனால் மாசடைந்து வருகின்றது என்பது பற்றி யோசித்து கொண்டு இருந்தேன்.

நிமல் : நம்மால் சூழல் மாசடைவதை எவ்வாறு தடுக்கலாம்.

வசந் : சில வருடங்களாக வளிமண்டலத்தில் உள்ள ஓசோன் படை சிதைவடைந்து வருவது பற்றி நீ அறிந்திருக்கிறாயா?

நிமல் : ஆம்! அறிந்திருக்கின்றேன் ஆனால் ஓசோன் படை சிதைவடைந்திருக்கும் சூழல் மாசடைவதாற்கும் என்ன தொடர்பு

வசந் : பொலித்தீன் உக்காத பொருள் எனபது எல்லோரும் அறிந்த விடயம்தான். அதனை எரிக்கும் போது உண்டாகும் வாயு வளிமண்டலத்தில் உள்ள ஓசோன் படையை துளையிடுகின்றது.

நிமல் : ஆனால் பொலித்தீன் பாவனையால் நன்மையும் உண்டுதானே?

வசந் : ஆம் பொலித்தீனால் நன்மைகள் உண்டுதான். ஆனால் தீமைகள் அதிகமாகவே உள்ளன.

நிமல் : அப்படி என்ன தீமைகள்

வசந் : கடையில் பொருட்களை பொலித்தீன் பைகளுக்குள் வாங்கி பொலித்தீன் பையை வெளியில் வீசி விடுகின்றார்கள். அதற்குள் மழைநீர் தேங்கிநிற்பதால் அதற்குள் நுளம்பு முட்டையிடும் தன் இனத்தை பெருக்குவது மட்டுமல்லாமல் மனிதர்களுக்கு நோயையும் ஏற்படுத்துகின்றது. அது மட்டுமல்லாமல் இதனால் அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் சிறுவர்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமல் : பொருட்களைக் கொண்டு செல்வதற்கு பொலித்தீன் பை மிகவும் உதவுகின்றது. அது மட்டுமல்லாமல் உணவுப் பொருட்களை பொலித்தீன் பைகளுக்குள் சில நாட்கள் வைத்திருக்க முடியும்.

வசந் : பொலித்தீன் பைக்குள் உணவுகளை பொதி செய்வதனால் பொலித்தீன் பையில் உள்ள நச்சுப்பதார்த்தங்கள் மனிதர்களுக்கு புற்று நோயை ஏற்படுத்துகின்றன. அதுமட்டுமல்லாமல் விலங்குகளும் பொலித்தீன் பைகளை உட் கொள்கின்றன. இதனால் விலங்குகள் இறக்கின்றன.

நிமல் : பொலித்தீன்களை தடை செய்தால் வேறு எதற்குள் பொருட்களை வாங்க முடியும்?

வசந் : ஓலையால் செய்யப்பட்ட பை, துணியில் செய்யப்பட்ட பை போன்று இன்னும் அதிகமாகவே உள்ளன.

நிமல் : ஆம் நன்கு அறிந்து கொண்டேன். எமது சுற்றாடலை பாதுகாப்பதற்காக நம் இருவராலும் என்ன செய்யமுடியும்?

வசந் : இது பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்.


நிமல் : சரி வசந் கதைத்துக் கொண்டு இருந்ததால் நேரம் போனதே தெரியவில்லை. சரி வசந் சென்று வருகின்றேன்.

**பி.சாயிரேகா**
க.பொ.த (சா.தரம்)
மட்/பட்/கணேஷா வித்தியாலயம், தம்பலவத்தை, மண்டூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமகள் வேண்டலில்
# நான்முகன் படைத்திட்ட விபுலானந்தன்!



முத்தமிழ் முனிவன் உலகின்
முதல் தமிழ் பேராசான்
நற்றமிழ் ஞானி நைட்டிகப் பிரமச்சாரி
நானிலம் போற்றும் வித்தகன்
விபுலானந்தனை மயில்வாகனனாய்...
வீறுகொண்ட கரைதீவில் பிறக்கவைத்து
தமிழ் சைவம் அடங்கலாக தொண்டுபல புரிந்த பின்பு
துறவியாக்கி பூவுடல் கெடுத்து புகழுடல் கொடுத்து
புவியினுக் கொளியளிக்கும் ஆதவனாய் ஆக்குமென்ற - நாமகளின்
வேண்டுதலை நனவாக்க நான்முகன் படைத்தளித்தான் !

சாமித்தம்பி கண்ணம்மை தம்பதிக்கு
சாகடந்த புதல்வனாக கருவுமுற்று உருவுமாகி
விரைந்து வளர் மதியும் போல் வளருகின்ற பாலகத்தில்
துள்ளி ஓடி பள்ளி சென்று படிக்க வந்த பாலகனை
நல்லதம்பி ஐயாவும் குஞ்சித்தம்பி ஆசானும்
குருவாய் வாய்த்து சுட்டுவிரல் நுனியதனால்
அகரம் தொட்டு சிகரம் காட்ட அதையுணர்ந்து
கல்முனை மெதடிஸ்த பாடசாலை புக்கு கல்வி பெற்று
மட்டு நகரடைந்து மெதடிஸ்த மத்திய கல்லூரியிலும் - அதையடுத்து
புனித மிக்கேல் கல்லூரியிலும் கல்விக்கனி நுகர்ந்துயர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேம்பிறிட்ஸ் கனிஸ்ட பரீட்சையிலே சித்தியாகி
அதையடுத்தான சிரேஸ்ட பரீட்சையிலும் பாசு பண்ணி
மதுரைத்தமிழ்ச்சங்கம் நடாத்துகின்ற நல்ல தமிழ்
பண்டிதப் பரீட்சையில் முதல்வனாயச் சித்தி பெற்று
இலண்டன் பிஎஸ்ஸி பரீட்சைக்கும் முகம் கொடுத்து
பாசாகித் திருப்தி கொண்டு தொழிலைத் தேடி நாடி
மாணவரின் ஆசுபோக்கி ஞானமூட்டும் குருவுமாகி
நாமகளி னருளினாலே நன்றாய்ப் படிப்பித்து வழியும் காட்டி
ஆங்கிலப் பயிற்சி பெற்ற ஆசானாய் பொலிவு கண்டு - விஞ்ஞான
டிப்ளோமா பட்டமதைத் தமதுமாக்கி பணி தொடர்ந்தான்

பாடசாலை முதல்வனானான் தன்மாணாக்கர் பரம்பரையை
உருவாக்கி உயர்த்தி விட அயராது பாடுபட்டான்
நன்னூல் நிகண்டு தந்த இன்சுவையை நுகர்ந்தவனாய்
தித்திக்கும் தமிழ் அமுதம் தனைப்பருகச் செய்துவிட்டான்
பன்மொழிப்புலமை பெற்றான் பல மொழி அறிவுகொண்டான்
பைந்தமிழ்க்காவலனாய் அவனியில் பவனி வந்தான்
இயற்றமிழ் வளர்க்க முன்னூற்றுக்கதிகமான கட்டுரையும்
இசைத்தமிழ் ஓங்க யாழ்நூலும் படைத்தளித்தான்
நாடகத்தமிழதனின் வாழ்வையெண்ணி - மதங்க
சூளாமணி யதனை மனமகிழ உலகுக் குவந்தளித்தான்

நரேந்திரனாம் சுவாமி விவேகானந் தனது
ஆதர்ஸ சீடனாகி அவன் பாதச்சுவட்டினது வழி நடந்து
சைவசமயப் பணியுடனே சமூகப்பணி சேர்த்திணைத்து
இலக்கியப்பணியுமாற்றி கல்விப்பணியதுவும் தொடரலுற்றான்
பிரபுத்தபாரதம் வேதாந்தகேசரி ராமகிருஸ்ணவிஜய மென்ற
பத்திரிகை அனைத்தினதும் நல்லாசானும் அவனே யானான்
பக்கமேதுங் கோடாமல் நடுவு நிலையில் நின்று
விமர்சனங்கள் செய்வதிலும் சோடை போகான்
பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரமும் ஆங்கில இலக்கியமும்
மொழிபெயர்த்த தோடல்லாமல் சொற்பொழிவானுமா யாகிநின்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவர், இயற்கை, சமயம், சமூகம் பற்றியதாய்
ஆங்கிலம் பற்றியதாய் அழகாய் கவி வடித்தான்
ஆராய்ச்சி யாளனாகி ஆர்வமோடு ஆய்வும் செய்தான்
ஆங்காங்கே கல்விச்சாலைகளை நடாத்துகின்ற பொறுப்பும் பெற்றான்
புதுப் புதிதாய் பாடசாலைகளின் பற்பலவும் அவனமைத்தான்
அனாதைச் சிறுவர்களின் கல்வி உயர்வை எண்ணி
அனாதை இல்லமதும் அமைத்ததோடே யல்லாமல் யாழ்ப்பாண
ஆரிய திராவிட பாஸா அபிவிருத்திச் சங்கமதை தானாய் நிறுவி
அதிலிருந்து பண்டித பரீட்சையின் பரீட்சகராய் பணிகளாற்றி
தமிழ்ப் பண்டிதர்கள் பலபேரை பாரினிலே உருவாக்கி விட்டான்

உலகினது முதல் தமிழ்ப் பேராசானாய் உயர்வும் கண்டான்
இலங்கையது பல்கலைக்கழகமதின் முதல் தமிழ் பேராசானும்
அவனே ஆகி தகைசான்ற தமிழறிஞர் உருவாக வைத்தான்
சென்னை வேலூர் சைவசித்தாந்த சமாசத்தின் தலைவராகி
சாதனைகள் பல படைத்து சென்னை பச்சையப்பன் கல்லூரி
கலைச்சொல்லாக்க மாநாட்டினிலே தலைமை தாங்கி
பன்னீராயிரம் சொற்கள் கொண்ட கலைச்சொற்கள்
அகராதியினை அகிலமே போற்றும் விதம் ஆக்கி வைத்தான்
உலகினது கீட்டிசைக்கும் மேற்றிசைக்கும் இலக்கியப்பாலமிட்டு
தமிழணங்கின் பெருமைதனை அகிலமெங்கும் பரவவிட்டான்

நாமகளின் வேண்டுதலால் தன்னை நான்முகன் படைத்தமையை
ஞான திருஸ்டியினால் நன்றாய் உணர்ந்தவனாய்
தான் பிறந்த மண்ணுக்கும் தன் தாய்மொழியாம் நற்றமிழுக்கும்
தானுதித்த சைவசமயத்திற்கும் தளர்வற்ற நிறைவுமிக்க பணிகளாற்றி
இந்தியச் சென்னையது மயிலாப்பூர் இராமகிருஸ்ண மடத்தினது
பிரபோதசைதன்ய ரெனும் ஆசிரமப் பெயருடனே துறவியாகி
ஈராண்டின் பின்னர் வந்த சித்திரா பௌர்ணமியில் முழுநிலவில்
சிவானந்த அடிகளால் ஞானோபதேசம் நனி பெற்றுய்து
சுவாமி விபுலானந்தரெனும் துறவுத் திருநாம மேற்றவராய்
இருபத்து மூன்றாண்டு கடந்து வாழ்ந்து பூதவுடல் நீத்து புகழுடல் எய்தினனே..

**கன்னிமுத்து சரவணன்**
கோவில் போரதீவு, வெல்லாவெளி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவிடும் உழவினைத் தள்ளி

விவசாய நிலமென்னு பேரு - தினம்
விசவாயு குடிக்கிது விவசாயி உசிரு
வானமும் பண்ணுது சதிய - நாங்க
வக்கத்த பயலுவ சாவுதான் கதியே!

சூரியனுக்கு நன்றி செலுத்தி உலகிற்கு
சோறுதான் போட்டோமே வாழ்வைக் கொழுத்தி
சூரியனும் நன்றி மறந்தான் - வயிற்றுக்கு
சோறின்றி உழவனும் துடித்து இறந்தான்



அரசியல் அழுகையும் பாரு - அதத்தான்
அதிகமாச் சொல்லுது மீடியாப் பவரு
விவசாயி சாவது செய்தியாய் - கூட
வெளிவரச் செய்யாத மீடியா ஜோரு

பஞ்சத்தில் செத்தோரே போங்க மறு
படியும் இவ்வுலகிற்கு உழவராய் வந்தால்
நெஞ்சினில் ஈரம் இல்லாம இவர்கள்
நஞ்சையும் உணவாய்த் தருவார் சொல்லாம

கணனி தான் வாழ்க்கையாச் சொல்லி - இஞ்ச
கடசியில் காசுகள் சேர்க்கிறார் அள்ளி
உணவிடும் உழவினைத் தள்ளி மடயர்
உண்டிக்கே வைக்கிறார் கடசியாய்க் கொள்ளி

சொல்லாத காசுகள் கூட நம்ம
செடிகளாய் விதைக்கிறார் பணத்தையே கொடையாய்
பொல்லாத இறையே மன திருந்தால் எங்க
பொறப்பயே தந்தோம் பொழுப்பையே தருவாய்

**ஆழிவேந்தன்**

வன்னிநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல பிழைகள் மலிந்து போச்சு

கரைகின்ற சுவரிடையிற் காற்றடிக்க, மரமுறியும் ஓசை கேட்கத்
திரைகின்ற மனம் அலறத் திகைத்துப் போய்ச் சிலையாகிக் குந்திக் கொண்டேன்
அருகிருந்துன் அழுகுவிழி குளமாக அமைதியுடன் வெப்ப மூச்சைப்
பெருகவிட்ட அந்நாளைச் சிறுபிள்ளை இவன் பார்த்ததுண்மை! அம்மா!

"கப்போடுஞ் சுவரோடும் இருந்திருந்து கனநேரங் கனவு காணல்
எப்போது மாறுமடா?" என்றெல்லாம் அன்றேசி ஏக்கம் சூழத்
தப்பாமல் எனை அருட்டித் தவித்தவளே, தயவான தரித்தி ரத்தின்
ஒப்புமைக்குள் வளர்த்தெடுத்த உத்தமியே உமதுமகன் ஆசை கேளாய்!

"பட்டாடை வாங்கித்தா, படம் பார்க்கக் காசுதா பசிக்கு தின்ன
முட்டை பருப் போடுமாட்டி றைச்சிதேன் நெய் முதலியன வேண்டும், தூங்க
கட்டில், அதில் உடலுறுத்தாக் கம்பளமும் பஞ்சணையும் காற்று லாவும்
எட்டறையும் வேண்டும்" என இவன் கேட்பதில்லை கேட்கப் போவதுமில்லை

பிரிவுமனப் பான்மைகளாற் பிளவுபட்ட சமுதாயம் பதவி மோகச்
சரிவுகளிற் சகோதரரை தள்ளி விளையாடுகின்றார் சதிகா ரர்கள்
கரவறியாச் சமுதாயம்; கண்ணியத்தின் காவலர்கள்
பெரியவர்கள் என்றிந்தப் பிசங்குமனப் பேயரையே நம்பு தையோ!

சாதிமதச் சச்சரவு சண்டைகளிற் காலத்தை கழுவி அன்புப்
பாதைகளில் முள்ளிட்டு மூடியதில் விழுபவரைப் பார்த்து தைத்தல்
வேதநெறி என்றுரைத்து வழிபாட்டுச் சுதந்திரத்தை மறுத்துக் கோயில்
ஆதனத்துக் காய்ப் படைத்த ஆண்டவனை சிறைவைத்தல் இவையாம் சேவை

"மொழியழியா வழியொன்றை முழுமையுறச் சமைப்பம்" எனச் சாட்டுச் சொல்லி
சுழிமலிந்த குழிக்குள்ளே – சொர்க்கமென நம்பவைத்துத் துடித்துச் சாகும்
இழிநிலைமை வலைக்குள்ளே சிக்கவைத்தார் சிறப்புற்றார் தங்கள் வாழ்க்கை
பழிசுமந்த இனமாகிப் பகை வளர்த்துப் பசையற்றுப் போகச் செய்தார்.

அதிகார மாளிகையில் அரசோச்ச ஆவலுற்றார் அந்த மோகம்
விதியறியா விடிவற்ற மக்களுயிர் பலிஎடுக்க வகுத்தார் பாதை
அதுமட்டாநன்மைசெயார், தீமைசெயச் சிறுபொழுதும் தயங்க மாட்டார்
மதிவாணர் அவருக்குக் கொடுத்தவற்றுள் ஒருபட்டம் கடமை வீரர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய ஏமாற்று வித்தைக்கா எம்மவர்கள் இன்று மட்டும்
ஒத்துழைத்தார் எனத்திகைத்தே உளம் உழைக்க உழைப்பின்றி உலகந் தூற்ற
"பெத்தாளே" எனப் பெரிய ஆசாமிப் பேர்வழிகள் பேச வைக்கும்
ஒத்தாசைக் காளானேன் உன் பெருமை குன்ற விட்டேன் உரைமறந்தேன்

சுயமாகச் சிந்திக்கும் சுதந்திரநாள் வரப்பாடுங் கனவில் வாழ்ந்தேன்
பயமாக இருந்ததனால் பாட்டாளி வர்க்கத்தைப் படுகுழிக்குள்
கயவர்கள் விழுத்தியதைக் கவனிக்க கண்ணிருந்தும் மறந்து விட்டேன்
புயலாகத் துணிவொன்று பிறந்துளது செயற்படாயான் தொடங்கி விட்டேன்

பிற்போக்குச் சேற்றுக்குள் கிடந்தழுந்தித் துடிக்கின்ற துயரக் கூச்சல்
நிற்பாட்டும் மருந்தொன்றை நினைவுலகில் தேடுகிறேன் நீண்ட நேரம்
மற்போட்டும் போலிகளை முறியடிக்கும் மாவலிமை குறைந்த தேனோ?
பிற்பாட்டுப் பாடியதால் கண்டபடி பலபிழைகள் மலிந்து போச்சு

**இராசையா கலைச்செல்வன்**
அபிவிருத்தி இணைப்பாளர்,
பிரதேச செயலகம், வெல்லாவெளி.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சியின் நன்மை, தீமைகள்

அறிவியலால் எண்ணற்ற அற்புதங்கள் விளைந்துள்ளன. அவற்றுள் ஒன்றுதான் தொலைக்காட்சியின் கண்டுபிடிப்பாகும். தொலைகாட்சியின் கண்டுபிடிப்பானது இன்று உலகையே நமது வீட்டினுள் கொண்டு வந்து விட்டது எனலாம். உலகின் பல பகுதிகளிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளை உடனுக்குடன் வீட்டிலிருந்தவாறே பார்த்து மகிழ முடிகின்றன. உலக நடப்புக்களை அறிந்து கொள்ளவும் அதற்கேற்ப விழிப்புணர்வுடன் நம்மை நாமே வழிநடத்திக் கொள்ளவும் முடிகிறது. இன்று தொலைக்காட்சியில் பல்வேறு தொழில் நுட்ப மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இம் மாற்றங்களினால் பல்வேறு வகையான நிகழ்ச்சிகளை நாம் பார்க்கக்கூடியதாய் இருக்கிறது.

தொலைக்காட்சிக் கண்டுபிடிப்பு ஓர் அற்புத சாதனையாகும். உலகின் எல்லாப் பாகங்களிலும் வாழும் மக்கள் அனைத்துப் பகுதிகளிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்திடவேண்டும் என்னும் ஆசையின் தூண்டுதலாலும் உந்துதலாலும் கண்டுபிடிக்கப்பட்டதே தொலைக்காட்சி ஆகும். தொலைக்காட்சியை முதன் முதலில் கண்டுபிடித்தவர் "ஜோன் லொகி பெயார்ட்" என்னும் சாதனையாளர். அவர் இத் தொலைக் காட்சியை உலகிற்கு அறிமுகப் படுத்தினார். காலப்போக்கில் பலவேறு வடிவங்களில் தொலைக்காட்சிகள் உருவாக்கப்பட்டன. இன்று அனைத்து வீடுகளிலும் காணப்படும் ஓர் அத்தியாவசியப் பொருளாகத் தொலைக்காட்சி மாறியிருப்பதை நாம் கண்ணாரக்காணமுடிகிறது. தொலைக்காட்சி காணாத கண் என்ன கண்ணோ? என்று கூறுமளவுக்கு இன்று இல்லங்கள் அனைத்தையும் மக்கள் இதயங்களையும் அது ஆக்கிரமித்துள்ளது. என்றால் தவறல்ல.

தொலைக்காட்சியின் பயன்கள் பல. தொலைவிலிருந்து காட்சிகளைத் தொகுத்து வழங்கும் அரிய சாதனம் அது என்பதை அனைவரும் அறிவர். உலகில் நிகழும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் நம் வீட்டின் அறைக்குள் கொண்டு வந்து காட்சிப்படுத்தி நம்மை மகிழ்விப்பதில் தொலைக்காட்சி முதலிடம் பெறுகிறது. தொலைக்காட்சியின் மூலம் பல தகவல்களை நாம் அறிந்து கொள்கிறோம். காலநிலை மாற்றங்களை அறிகிறோம். தொலைக்காட்சி சிறந்த பொழுது போக்குச் சாதனமாகவும் திகழ்கின்றது. உடலுழைப்பில் ஈடுபட்டுக் களைப்புற்று இருப்போருக்குப் புதியதோர் உற்சாகத்தை அளித்திடத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பெரிதும் உதவுகின்றன. ஆடல் பாடல்களையும் நகைச்சுவை நிகழ்ச்சிகளையும் அவை அள்ளித்தருகின்றன.

தொலைக்காட்சி சிறந்ததோர் தகவல் களஞ்சியமாகவும் விளங்குகின்றது. தினந்தோறும் பல வகையான செய்திகளைத் தொகுத்து வழங்குகின்றது. உலகில் பல்வேறு பகுதிகளிலும் நிகழ்த்தப்படும் சாதனைகளையும் புதிது புதிதாக நிகழும் கண்டுபிடிப்புக்களையும் அது தொகுத்து வழங்குகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவிநடுக்கம், சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களையும் அச்சுறுத்தல் களையும் இது தாமதமின்றி தெரிவித்து உதவுகிறது. அறிஞர், பெருமக்களின் கலந்துரையாடல்களையும் நாட்டு நடப்புக்ளையும் பல்வேறுபட்ட துறைகளையும் பற்றிய தகவல்களையும் மக்கள் அறிந்து கொள்ளத் தொலைக்காட்சி பெரிதும் உதவுகிறது.

அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் தொலைக்காட்சி இன்று தலைசிறந்த பொழுது போக்குச் சாதனமாகவும் விளங்குகின்றது. இவை மக்களின் சிந்தனையைத் தூண்டும் வகையில் அமையுமாயின் வரவேற்கத்தக்கனவே. எனினும் பெரும்பாலான நிகழ்ச்சிகள் குடும்பத் தகராறுகளையும் குடும்ப உறவு, சீர்கேடுகளையும் பிரதிபலிப் பனவாகவே அமைகின்றன. இதனால் நல்ல சிந்தனைக்குப் பதிலாக தீய எண்ணங் களைப் பார்த்துக் கண்ணீர் விடுவதைத் தவிர்க்க வேண்டும். குடும்ப உறவு, உலக நட்பு போன்றவைகளை சித்தரிக்கும் நல்ல நாடகங்களை ஒளிபரப்பின் பார்ப்போர் மனங்களில் நல்லசிந்தனைகளும் கருத்துக்களும் நன்கு பதியும் எனலாம். தொலைக்காட்சி கண்டுபிடிக்கப்பட்டதாலோ தொலைக்காட்சிப் பெட்டியினாலோ எந்த விதமான தீமை களையும் மனித சமுதாயம் பெறவில்லை. மனித சமுதாயம் நன்னிலை பெறவேண்டும் என்னும் நோக்குடலேயே வினாவிடைகள் கல்வியூட்டும் பற்பல திறன் போட்டிகள் என்பன தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பப்படுகின்றன. ஆனால் தொலைக்காட்சி நிலையங்கள் இயங்கும் முறைகளினால்தான் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தீய விளைவுகளை ஏற்படுத்துவதாக விமர்சனம் செய்யப்படுகின்றன.

இன்று கற்றறிந்தோர் பலர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் குறித்து பல்வேறு வகையான விமர்சனங்களை முன்வைக்கின்றனர். தமது தமிழ் பயன்பாட்டுக்கே இவை முரண்பட்டவையாக அமைகின்றன எனச் சுட்டிக்காட்டுகின்றனர். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அடிக்கடி விளம்பரங்கள் காண்பிக்கப்படுகின்றன. இது எதற்கு என்றால் தொலைக்காட்சி பார்க்கும் அனைவரும் ரசிக்கும் கதாபாத்திரமாக மட்டுமன்றி அதுவாகவும் மாறிவிடுவார்கள் என்ற பயத்தினால்தான் விளம்பரங்கள் நடுவில் காட்டப்படுகிறது.

இவ் விளம்பரங்களிலும் பெரும்பாலானவை பார்ப்போரை கவர்வனவாகவும் ஆசையை தூண்டுவனவாகவும் அமைகிறது. மக்களை மேற்கத்தைய நாடுகளின் நடைமுறைகளைப் பின்பற்றத் தூண்டுவதாகவும் அமைகின்றன. இதனால் நம் நாட்டில் நாகரிச் சீரழிவும் பண்பாட்டு சீரழிவும் ஏற்படுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிலும் வீடுகளிலும் கலாசாரசீரழிவுகள் பெருகுவதற்கு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளே மூலகாரணமாக அமைகின்றன. அனைவரும் சிந்திக்க வேண்டிய விடயம் இதுவாகும். நமது அறிவையும் நற்பண்புகளையும் பண்பாட்டையும் வளர்த்திடப் பெரிதும் பயன்படுமெனக் கருதிய தொலைக்காட்சியே அவற்றைச் சீரழித்துக் குழி தோண்டிப் புதைக்கும் வகையில் அமைந்து விடக்கூடாதுதென்பதே இங்கு வலியுறுத்தப் படும் கருத்தாகும். தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் சில பார்போரின் பொன்னான நேரத்தை பாழடித்து விடுவதாகவும் குறை கூறப்படுகிறது.

தொடர்ந்து நாள் முழுவதும் காண்பிக்கப்படும் தொடர்நாடங்கள் வீடுகளில் பெண்கள் தங்கள் நாளாந்த வேலைகளைச் செய்யவிடாது தடுக்கும் ஊடகமாகத் தொலைக்காட்சி மாறி விடுகின்றது. பல வேலைகள் முடங்கிப் போகின்றன. தொலைக்காட்சி நாடகங்கள், நிகழ்ச்சிகள், திரைப்படங்கள் சில பெண்களை அவற்றுக்கு அடிமைகளாக மாற்றி விடுகின்றன. கல்வியில் கவனம் செலுத்த வேண்டிய இளைய தலைமுறையினரின் படிக்கும் நேரத்தைப் பாழடித்து விடுகிறது. அது மட்டு மன்றி இலட்சியத்தோடு படித்துக் கொண்டிருக்கும் சிறுவர்கள் ஒரு நாளைக்குத் தொலைக்காட்சியைப் பார்த்தால் அவர்களுக்கு ஆசையும் ஆவலும் நாளை என்னநடக்குமென்ற சிந்தனையில் ஆழ்ந்து விடுவார்கள். இதனால் இவர்களது இலட்சிய வாழ்வு வெறும் கனவு வாழ்வாக மாறிப்போய்விடும். அது மட்டுமன்றி விளையாட்டு ஒளிபரப்புக்கள் படிக்க வேண்டிய மாணவர்களின் பலமணி நேரத்தைப் பாழடித்து விடுகின்றன. அவர்களது சிந்தனைகளைத் திருப்பி விடுகின்றன.

சுருங்கக் கூறின் அறிவியல் வளர்ச்சியின் பயனாகக் கண்டுபிடிக்கப்பட்ட தொலைக்காட்சி ஓர் அற்புதசாதனம். அதனைப் பயன்படுத்துவோர் அதன் தீமையை தூரவிட்டு நன்மைகளை ஞாபகத்தில் வைக்கவும். அதனை இவ்வாறு கூறலாம் "அன்னமென்னும் பறவை பாலையும் நீரையும் கலந்து வைத்தால் பாலை மட்டும் குடிக்கும் நீரை ஒதுக்கி விடும்" அது போலவே நாமும் நடக்க வேண்டும். எனவே மனிதர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் தீய விளைவுகளை உண்டாக்கும் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும். அவ்வாறு தவிர்க்கும் பட்சத்தில் நன்மையே விளையும்.

மக்களுக்கு நன்மை தரும் நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சி நிலையங் கள் ஒளிபரப்ப முன்வர வேண்டும். மக்களின் மனநிலையைப் பாதிக்கும் நிகழ்ச்சிகளைத் தவிர்க்க வேண்டும்.

அதே வேளையில் நாமும் நல்லனவற்றையே பார்ப்போம் என உறுதி பூணுவோமாக! இன்றைய உலகம் அறிவியல் உலகம். அறிவியல் வளர்ச்சியில் நாம் பெற்றுள்ள அருமையான பரிசுகளில் ஒன்று தொலைக்காட்சி. அன்றாட வாழ்வில் தொலைக்காட்சி இன்றியமையாத இடத்தைப் பெற்றுவிட்டது எனலாம். இன்று வீடு தோறும் சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும் கூடி அமர்ந்து கொண்டு கேட்டு மகிழவும் பயனுள்ள வகையில் பொழுதைப் போக்கவும் பயன்படுவது தொலைக்காட்சி.

- நன்றி -

**ஜெ. திவ்யா**


மட்/பட்/கணேஷா வித்தியாலயம்,

தம்பலவத்தை, மண்டூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் கேட்க மனிதனால் ஈந்த மறை



மனிதன் இறைவனிடம் கேட்டானாம் "இறைவா நீ எனக்கொன்றைத்தரமாட்டீரா" என்று. அதற்கு இறைவன் "நீ கேட்காமலே நான் உனக்குக் கீதையைத் தந்துள்ளேன்" என்றாராம். "சரி நான் உனக்கு கீதையைத்தந்ததுபோல், இறைவனாகிய எனக்கு நீ எதனைத்தந்தாய்" என்று மனிதனிடம் இறைவன் கேட்க. மனிதன் சொன்னானாம் "நீங்கள் கீதையைத் தர நான் அதற்குப் பதிலாக 'திருவாசகத்தைத்' தந்துள்ளேன்" என்று.

மேலும் மனிதன் மனிதனிடம் கேட்டானாம் "எனக்கொன்றைத்தாருமென்று" அதற்கு மனிதன் மனிதனிடம் சொன்னான் "உனக்குத்தான் திருக்குறள் ஒன்றினைத் தந்துள்ளேன்" என்று. எனவே மனிதன் கேட்க மனிதனால் கொடுக்கப்பட்ட மாமறைதான் திருக்குறள்.

இந்தத்திருக்குறள் எழுதப்பட்ட காலமாயினும் சரி, ஐயன் பெருமான் வள்ளுவர் வாழ்ந்த காலமானாலும் சரி அக்கால தமிழகத்தில் பல சமயங்களான சமணம், பௌத்தம், வேதமரபு சார்ந்த இந்து மதம் என்பனவும் இருந்ததென்றும், ஆனால் இந்து மதம் என்ற பெயரின்றி தமிழர்தம் மதமெனக்கருதப்படும் "சிவநெறியும்" திருமால் வழிபாடும் இருந்ததாம். இருந்தாலும் இன்று வழக்கில் உள்ளது போல் சைவம், வைணவம் என்ற பெயர்கள் பெறவில்லை என்றும் இதேபோல் ஏனைய சாங்கியம், யோகம், நியாய வைசேடிகம், மீகாமம் தத்துவங்களும் உலகாயதமும் இருந்ததோடு ஆத்தீகம், நாத்தீகம் என்பனவும் இருந்ததாக டாக்டர் வ. செ. குழந்தைச்சாமி அவர்கள் கூறியுள்ளார்.

இத்தனை சமய வழிபாடுகளும் இருந்த காலகட்டங்களில் வள்ளுவர் பெருமான் இத் 'திருக்குறளை' எழுதித் தந்த போதிலும் எந்தவொருசமயத்தினையும் அச்சமயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள எத்தெய்வங்களினையும் முதன்மைப்படுத்தாது நடு நிலைநின்று உலகில் வாழும் மானிடம் உய்யும் வழிவகைகளையே ஒன்பதுனாயிரத்தி முன்னூற்றிப்பத்துச் சொற்களில் (9310) சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டுமல்லாமல் எந்தவொரு சமயத்தினையும், நெறியினையும் இழிவு படுத்தும் வகையில் "அவையெலாம் தாழ்ந்தது. நான் சொன்ன திருக்குறள் மட்டுமே உயர்ந்தது" என்றெல்லாம் வீண்விமர்சனங்களும் செய்தாரில்லை.

இருந்தும் திருக்குறளைப்படித்த பல சமயங்களைச் சார்ந்தோர் கீழேகுறிப்பிடப்படும் திருக்குறள் பாக்களைக்காட்டி (எ.கா)

❖ திருக்குறளின் அறத்துப்பால் 26 புலால்மறுத்தல் அதிகாரத்தில் வரும்
"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்" - 260 என்ற திருக்குறளையும்

❖ இதே அறத்துப்பால் 33 கொல்லாமை என்ற அதிகாரத்தில் வரும்.
"கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்
மேற்செல்லாது உயிருண்ணும் கூற்று" – 326 என்ற திருக்குறளையும் காட்டி தங்களது சமயமான சமணசமய நூல்தான் திருக்குறள் என்றும்

❖ அறத்துப்பால் 1 கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் வரும்.
"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்" - 3 என்ற குறளைக் காட்டித் தங்கள் சமயமான பௌத்த சமய நூல் திருக்குறள் என்றும்

❖ அறத்துப்பால் 36 மெய் உணர்த்தல் அதிகாரத்தில் வரும்.
"பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு" - 351 என்ற திருக்குறளைக் காட்டித் திருக்குறள் தங்களது சமயமான இந்துசமய நூல்தான் திருக்குறள் என்றும்

❖ அறத்துப்பால் 23 ஈகை எனும் அதிகாரத்தில் வரும்.
"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்" – 228 என்ற திருக்குறளைக்காட்டி திருக்குறள் தங்களது சமயமான கிறிஸ்தவ சமய நூல் தான் திருக்குறள் என்றும்

❖ பொருட்பால் 84 பேதைமை எனும் அதிகாரத்தில் வரும்.
"கழா அக்கால் பள்ளியுள் வைத்தற்றால்சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்" – 840 என்ற திருக்குறளைக்காட்டி திருக்குறள் தங்களது சமயமான இஸ்லாமிய சமய நூல்தான் திருக்குறள் என்றும் சொந்தங் கொண்டாடிய சம்பவங்களுமுண்டு!

ஆனால் இத்தனை சமயங்களையும் நெறிகளையும் தாண்டி இந்த நிலவுலகில் வாழும் கொடானுகோடி மக்களுக்காகவும் இலகுவான வாழும் வழிகளைக் கூறி நிற்பது தான் திருக்குறள்! ஏழு சீர் கொண்ட இரு அடிக்குறட் பாவினுள் வடித்துள்ள ஒப்பற்ற உண்மைகளை மேலும் வலுச்சேர்க்கும் வகையில்

"தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தான் - மனையளகு
வள்ளைக்குறங்கும் வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பாவிரி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று புலவர் கபிலர் அவர்கள் சிறு புல்லின் நுனியில் தினை அளவிலான பனித்துளியினுள்ளே நீண்டு வளர்ந்திருக்கும் பனை மரம்தெரிவது போல் இந்த ஈரடிக்குறட் பாக்களில் பெருமான் திருவள்ளுவர் அவர்கள் சொல்லி வைத்துள்ளவற்றைப் படித்துணர அது கடலாக, உலகாக விரிவடையும் என்ற கபிலரின் வரிசையிலே ஐம்பத்தைந்து பெரும் பெரும் புலவர்கள் "வள்ளுவர் மாலையில்" சொல்லியபடி ஆயிரக்கணக்கான அறிஞர்கள் படித்தும் மேலும் பல நூறு பேர் திருக்குறளை அக்கு வேறு ஆணி வேறாக ஆய்வுகள் செய்தனர். அந்த வகையில் 1017ம் ஆண்டில் மணக்குடவர் முதல் நானறிந்த வரை 2007ம் ஆண்டு வரையில் புலவர் தமிழ்கூத்தன் என 210 இற்கும் மேற்பட்டஉரை ஆசிரியர்களால் உரைகள் எழுதியும் 1730ல் இலத்தின் மொழியில் வீரமாமுனிவர் முதல் 1979 வரை "வாக்கிர போலி மொழியில்" திரு. கப்ட்சிரோமணியென 106 மொழிபெயர்ப்புக்களாக பல மொழி பெயர்ப்புக்கள் செய்தும் திருக்குறள் எந்த ஒரு இனத்தையோ சாதி நெறியையோ மொழியையோ பிரதேசத்தையோ நாட்டையோ குறித்து எழுதப்பட்டதல்ல என்பது பல்லோர்கண்ட முடிவு. உலகிடையே உள்ள திரிபீடகம், சதுர்வேதம், விவிலியம், திருக்குரான் போன்ற நூல்கள் யாவும் சமயம் சார்ந்த நூல்கள். திருக்குறள் சமயம் கடந்து மனிதன் ஒன்று பட்டு வாழ வழி சொல்லிய நூலாகும்.

கி.மு 4ம் நூற்றாண்டில் தோன்றிய கிரேக்கத் தத்துவ ஞானி சோக்கிரட்டீஸ் அவர்களின் தத்துவங்களை உள்ளடக்கியதும் கி.மு. 5ம் நூற்றாண்டில் சீனத்தில் தோன்றிய கன்.ஃபியூஷியஸ் மோதீ ஆகியோரின் கோட்பாடுகளையும் மேலும் பண்டையக் கிரேக்கத்தில் ஞானிகளான ஸோலோன் (கி.மு.559), பிளாட்டோ (கி.மு.427), பாலஸ் தீனத்தைச் சேர்ந்த தெகோலா எனும் இடத்தில்தோன்றியவரும் சமுதாய ஏற்றத்தாழ்வு, வேற்றுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தவரும் இயல்பாகப்பேரறிவும் பேராற்றலும் பெற்று விளங்கிய அறிஞர் ஆமுஸ் (கி.மு. 800) என உலகில் தோன்றிய அனைத்துச் சிந்தனையாளர்களினதும் சீர்திருத்தவாதிகளினதும் பொருளாதார மேதைகளினதும் எண்ணங்களையும் நோக்கங்களையும் இலட்சியங்களையும் கொண்டதுதான் திருக்குறள்.

ஆம்!

"பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தேரிந்து திறந்தொறுஞ்சேரச் - சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல்லால்" (அரசில்கழார்)

நன்றி

**ஆ.மு.சி. வேலழகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றமுடன் வாழ்வாயடா...!

உழவன் என்று சொல்லும் போது உனக்கு நிகர் ஏதடா
அழகான நம் இலங்கை உழவாலே சிறக்குதடா
உச்சி வெயில் வேளையிலும் நெற்றி வியர்வை சிந்துகின்றாய்
மெச்சி உன்னைப் போற்றிடவே மேதினியோ தயங்குதடா!

ஆழி சூழ் பூமி நங்கை ஆதவனைக் காணும் முன்பே
தோழி போன்ற உன் வயலை நாடி நீ செல்கின்றாய்
மேழி பிடிக்கும் உன் கரமே மேலான செல்வம் என
வாழி என வாழ்த்துகின்றேன் வானளாவ உயர்வாயடா!

காடு வெட்டி நிலம் திருத்தி கழனி வளம் பெருக்குகின்றாய்
ஆடு மாடு கோழிகளை அருமையாக வளர்க்கின்றாய்
பாடுபட்டு நீ உழைத்துப் பஞ்சம் பசி தீர்க்கின்றாய்
நாடு கூட உன் தயவை நாடியே நிற்குதடா

அழியாத புகழ் படைத்த அருமையான உன் தொழிலை
இழிவாகப் பேசிச் சிலர் ஏளனம் பண்ணுகின்றனர்
பழி பாவம் எதுவும் இன்றிப் பாடுபடும் பாட்டாளி உனை
எழிலாகப் போற்றுகின்றேன் ஏற்றமுடன் வாழ்வாயடா!




**திருமதி. மலர் சிவராசா**
(கலாபூஷணம், இலக்கியமணி, மண்டூர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகத்தின் பயன்பாடு

இன்றைய உலகில் மாணவர்களாகிய நமக்கு கல்வி நடவடிக்கைகளுக்கு மிக முக்கியமான விடயம் வாசிப்பாகும். வாசிப்பில் அதிக விருப்பம் ஏற்பட வேண்டுமானால் புத்தகங்கள், பாடநூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், விளம்பரங்கள் போன்றவற்றை வாசிக்க வேண்டும். வாசிப்பதற்கு நூல்கள் மட்டும் தேவை என்று நினைப்பது தவறு. நூல்களை சத்தமில்லாத இடத்தில் வாசிக்கும் போது வாசிப்பில் நமது ஈடுபாடு அதிகமாகும். அவ்வாறான ஒரு இடம்தான் நூலகம். நூலகம் எப்போதும் அமைதியாகவும், சுத்தமாகவும் காணப்படும்.



நூலகமானது அமைதி, சுத்தம் போன்றவற்றுக்கு உதாரணமாக விளங்கும் இடமாகும். பல அறிஞர்கள் பற்றிய விடயங்கள் அடங்கிய நூல்கள், ஆரம்பத்தில் மனிதன் வாழ்ந்துள்ள விதம் பற்றிய விடயம் உள்ளடக்கிய நூல்கள், பத்திரிகைகள், துண்டுப்பிரசுரங்கள், விளம்பரங்கள் போன்றன நூலகத்தில் காணப்படுகின்றன. வேலைவாய்ப்புக்களைத் தேடி அலைகின்ற இளைஞர்களுக்கு பத்திரிகையில் வேலை வாய்ப்பிற்கான விளம்பரங்கள் உள்ளன. நூலகத்தினால் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்றது.

நூலகத்திற்கு செல்வது எமது பொழுது போக்காகும். நமக்கு ஓய்வு கிடைக்கின்ற நேரத்தில் எல்லாம் நூலகத்திற்கு செல்வதால் நமக்கு பத்திரிகைகள், நூல்கள் வாசித்தமாதிரியும் இருக்கும் பொழுது போக்காகவும் இருக்கும். ஒரு சிலர் நூலகம் என்பது தேன்கூடு, நூல்கள் ஒவ்வொன்றும் தேன் துளிகள் என்று சொல்லுவர். நூலகம் என்கிற தேன் கூட்டத்தில் இருந்து நூல்கள் என்கிற தேனை குடிக்கும் போது சுவையாக இருப்பதோடு புத்தக வாசிப்பில் நம்மை ஈடுபாடு உள்ளவர்களாக மாற்றுகின்றது.

நூலகத்திற்கு செல்வதால் உலக விடயங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும். ஏழையின் நிரந்தரச் சொத்து கல்வி. கல்வியைப் புரிந்து கொள்ளவும் தெரிந்து கொள்ளவம் தேவையான விடயங்கள் நூலகத்தில் உள்ளன. வாழ்க்கை அனுபவங்கள் பற்றிய கதைகள், புராணக் கதைகள், இலக்கியங்கள், நாவல்கள் ஆகிய புத்தகங்கள் அவற்றுளடங்கும். வாசிப்பு மனிதனை பூரணமடையச் செய்கின்றது. மனிதன் பூரணமடைய புத்தகங்கள் மட்டுமன்றி நூலகங்களும் உதவுகின்றன. மனிதனின் உயிர் மூச்சு வாசிப்பாக இருந்தாலும் அதற்கு பங்களிப்பு செய்வது நூலகங்கள் ஆகும். இன்றைய உலகில் வாசிப்புப் பழக்கம் குறைந்து வருகிறது. நாம் ஓய்வுள்ள நேரத்தில் நூலகத்திற்குச் செல்வது நல்லதொரு பழக்கமாக கொள்ள வேண்டும். நூலகத்திற்குச் செல்வதால் வாசிப்புப் பழக்கம் அதிகமாகும். மாணவர்களாகிய நாங்கள் நூலகத்திறகு சென்று நல்ல பயனைப் பெறுவோம்.

**ஜெ.திலோஜா**

மட்/பட்/கணேஷா வித்தியாலயம்

தம்பலவத்தை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பறையில் கற்றல் – கற்பித்தற் செயற்பாடுகள் தோல்வி அடைவதற்கான காரணிகளில் ஆசிரியரின் பங்கு

வகுப்பறைக் கற்றல்-கற்பித்தற் செயற்பாடுகளைப் பாதிக்கும் காரணிகள் பலதிறத்தனவாக இருக்கின்றபோதிலும் மிகவும் முக்கிய பங்கு வகிப்பது ஆசிரியர் தொடர்பான காரணியாக உள்ளது. இவ்வாறு முக்கியத் துவம் பெறுகின்ற ஆசிரியரின் செயற்பாடு திருப்திகரமாக அமையுமிடத்து பெரும்பாலும் கற்றல்-கற்பித்தற் செயற்பாடும் வெற்றி பெறுகின்றது. அச் செயற்பாடு திருப்தியற் றதாக அமையுமிடத்து வகுப்பறைச் செயற்பாடும் தோல்வியிலேயே முடிவடை வதனை நாம் அவதானிக்க முடிகின்றது.

அந்தவகையில் வகுப்பறைச் செற்பாடுகள் தோல்வியடைவதில் ஆசிரியரின் பங்கு எத்தகையது என்பதை நாம் நோக்குவது பொருத்தமாகும். அவ்வாறு இனங்காணப் பட்டுள்ள காரணிகள் பின்வருமாறு:



**1. ஆசிரியரின் முன்னாயத்தமின்மை – திட்டமிடலின்மை :**

ஆசிரியரானவர் தான் வகுப்பறையில் நடைமுறைப்படுத்த இருக்கும் கல்வி நோக்கங்களை மாணவர்களுக்கு அடையச்செய்யும் செயற்பாட்டினை வெற்றிகரகமாக நிறைவேற்ற வேண்டுமாயின் அவர் போதிய திட்டமிடலுடன் கூடியதாக தன்னை முழுமை யாக முன்னாயத்தப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். அந்தவகையில் பாடத்திட்டத்துக்கமைவாக, வேலைத்திட்டத்துக்கமைவாக வேலைத்திட்டத்தை தயாரித்துக் கொள்வதும் மிகமிக முக்கியமாகும்.

அத்தோடு அன்றய பாடவேலையை எப்படிக் கொண்டு செல்வவேண்டும் என்பதற்கு பொருத்தமான கற்பித்தல் முறைகள் மற்றும் துணைச்சாதனங்கள் பயிற்சி வினாக்கள். உதாரணங்கள். செயற்பாட்டு அம்சங்கள் அனைத்தையும் நன்கு திட்டமிட்டு உரியவற்றை ஆயத்தநிலையில் தயார்படுத்திக் கொள்ளவும் வேண்டும். இவை முன்திட்டமிடலோ முன்னாயத்தமோ அற்றிருக்கும் நிலையில் வகுப்பறைச் செயற்பாடும் தோல்வியில் முடிவுறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. பொருத்தமான நுட்பமுறைகளைக் கையாளாமை:**

ஆசிரியர் வகுப்பறைக்கற்பித்தல்-கற்றல் செயற்பாட்டில் வெற்றிபெற வேண்டுமாக இருந்தால் அவர் குறித்த பாடத்தைக் கற்பிக்கும் போது பொருத்தமான கற்பித்தல் முறை / முறைகளையும் பொருத்தமான துணைச்சாதனங்களையும் மற்றும் பயிற்சி மீளவலியுறுத்தல், பின்னூட்டல், மதிப்பீடு போன்றவற்றையும் பொருத்தமுறப் பிரயோகிக்க வேண்டும் இவை பொருத்தமுற அமையாதவிடத்து ஆசிரியரின் கற்றல் கற்பித்தற் செயற்பாடகளும் வகுப்பறையில் தோல்விகண்ட ஒன்றாகவே அமைந்து விடுகின்றது.

**3. படிமுறையாக கற்பித்தலை நடத்திச் செல்லாமை :**

ஆசிரியர் வகுப்பறைச் செற்பாடுகளை முன்னெடுக்கும் போது முன்னையதன் தொடராகவும் அதேவேளை தெரிந்ததிலிருந்து தெரியாத விடயத்தை நோக்கியும் இலகுவிலிருந்து கடினத்தை நோக்கியும் மாணவர்களுக்கு அவற்றை வழங்கவேண்டும் அப்போது தான் கல்விநோக்கங்களும் ஆசிரியரின் கற்பித்தல் நோக்கங்களும் வெற்றிகாணும் இல்லையேல் இச்செயற்பாடுகளும் நோக்கங்களும் தோல்வியிலேயே முடிவடையும்.

**4. சூழலுக்குப் பொருத்தமான வகையில் வகுப்பறைச் செயற்பாட்டை ஒழுங்கமைக்காமை :**

ஆசிரியரின் கற்பித்தற் செற்பாடு வெற்றிபெற வேண்டுமாக இருந்தால் அவர் சூழலுக்கேற்றதாக வகுப்பறைச் செற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். குறிப்பாக இடம், காலம், நேரம், மாணவர்நிலை, அவர்களின் கலாசாரம், பழக்கவழக்கங்கள், நடைமுறைகள் இவற்றைக் கருத்திற் கொண்டு அவற்றுக் கிசைவாக எடுத்துக் கொண்ட கல்வி நோக்கங் களை அவர்களுக்கு முன்வைக்க வேண்டும். இவைகருத்திற்கொள்ளப்படாது வகுப்பறைச் செற்பாடுகளை முன்வைக்கும் ஆசிரியர் தோல்வியையே சந்திக்கநேரும்.

**5. தொழில் ரீதியான பயிற்சி அனுபவம் இன்மை/போதாமை:**

வகுப்பறைக் கற்பித்தலில் மேம்பாடுகண்ட ஆசிரியர்கள் தொழிற்றகைமை பெற்றவர்களாகவும் போதிய பயிற்சி பெற்று அனுபவமிக்கவர்களாகவும் காணப்பட்டனர். இவை போதாத ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தற் செயற்பாட்டினை வெற்றிகரமாக அமைப்பதில் பாரிய தடைகளை எதிர்கொண்டு அதில் தோல்வி காண்கின்றனர்.

**6. தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு கற்பிக்காமை:**

வகுப்பறைச் செயற்பாட்டில் ஓர் ஆசிரியர் வெற்றிபெற வேண்டுமாயின் அவர் வகுப்பறையிலுள்ள ஒவ்வொரு மாணவனையும் தனித்தனியாக அறிந்து அவர்களிடையே காணப்படும் தனியாள் வேறுபாடுகளுக்கமைய கற்றல் கற்பித்தற் செற்பாடுகளை ஒழுங்கமைத்துக்கொள்ளவேண்டும். அதாவது அவர்களின் விருப்பு வெறுப்புகள், தேவைகள், நுண்ணறிவு, வயது, வகுப்பு, முன்னறிவு ஆகியன கருத்திற்கொள்ளப்படுமிடத்து கற்பித்தலும் வெற்றியளிக்கும். இல்லையேல் அதுவும் தோல்வியையே சந்திக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. ஆசிரியர் அதிகாரத் தோரணையில் செயற்படல்:

ஓர் ஆசிரியர் ஆசிரியத்துவம் நிரம்பப்பெற்றவராக இருப்பது அவசியம் அவர் மாணவரை முதன்மைப்படுத்தி ஆசிரியமையத்திலிருந்து விடுபட்டு சனனாயகப் பண்புடன் கூடிய விதத்தில் மாணவர்களால் விரும்பி மதிக்கப்படக்கூடிய நிலையில் நின்று தன்பணியைத் தொடர்வாராயின் அவரை மாணவர் விரும்புவதுடன் அவர் கற்பிக்கும் பாடத்திலும் நாட்டம் கொண்டு கற்பர். மாறாக அவர் சர்வாதிகாரப்போக்குடன் எடுத்தற்கெல்லாம் மாணவர்மீது குற்றம் கண்டு பிடித்து எரிந்து விழுவாரேயானால் அவரையும் அவரது கற்பித்தலையும் மாணவர் விரும்பாத அதேவேளை அவரது வகுப்பறைச் செற்பாடுகளும் தோல்விகாணும்.

## 8. ஆசிரியரானவர் அவரது பாடங்களுக்கு தொடர்ச்சியாக சமுகமளியாமையும் அடிக்கடி லீவெடுத்தலும் வகுப்பறையில் உரிய நேரம் வரை செற்பாட்டிலீடுபடாமையும்:

ஓர் உண்மையான ஆசிரியர் அவரது பாடவேளையில் தொடச்சியாக உரிய நேரத்துக்கு சமுகமளித்து பாடவேளை முடியும்வரை வகுப்பிலிருந்து மாணவர்களைசெயற்படவைப்பவராக இருப்பார். அதேவேளை அடிக்கடி லீவெடுப்பதையும் தவிர்த்துக் கொள்வார். இதனால் மாணவர் நம்பிக்கையுடன் பாடசாலைக்கும் பாடங்களுக்கும் சமுகமளிப்பர். கற்பித்தலும் வெற்றி பெறும். தவிர ஆசிரியர் அடிக்கடி லீவெடுப்பதும் வகுப்பறையில் பாடங்களுக்க சமுகமளிக்காமையும் வகுப்பறைச் செற்பாடுகளை வழங்கி வழிப்படுத்தாமலும் இருக்கும்பட்சத்தில் அவரின் கற்றல் - கற்பித்தற் செற்பாடுகளும் தோல்வியுறும்.

## 9. ஆசிரியர்களிடையேயான சேவைமனப்பாங்கு குறைவு :


சேவை மனப்பாங்குடன் கருமமாற்ற வேண்டிய ஒரு சேவையே ஆசிரியசேவை. அது வெறும் தொழில் மட்டுமன்று பைல்களுடனன்றி உயிர்களுடன் ஊடாட்டமுள்ள ஒரு சேவையாக உள்ளது. ஆதலால் ஆசிரியர்கள் தமது செயற்பாடுகளை சேவை மனப்பாங்குடன் ஆற்றவேண்டியது கட்டாயத்தேவையாகும். குறித்தகால வரையறைக்கு மேலும் பெருஞ்சேவையாற்றும் ஆசிரியர்களின் செற்பாடுகள் பெருவெற்றி கண்டுள்ளன. மாறாக சேவைமனப்பாங்குடனன்றி போக்கடி போக்காக / கடமைக்காக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலீடுபடும் ஆசிரியர்களின் வகுப்பறைச் செற்பாடுகள் தோல்வியே காண்கின்றன.

## 10. மாணவரின் கணிப்பைப் பெறாத ஆசிரியர் :

சிறந்த நன்னடத்தையுடன் கூடியவரும் ஆசிரியத்துவம் மிக்கவரும் அவரது பணிகளைச் செவ்வனேயாற்றி அவர்களுக்கு வேண்டியபோது பாராட்டு மற்றும் தட்டிக் கொடுப்புக்களையும் மேற்கொள்ளும் ஆசிரியரும் தமது வகுப்பறைச் செயற்பாடுகளில் வெற்றிகாண்கின்ற அதேவேளைஇவற்றை நடைமுறைப்படுத்தாததால் மாணவரின் கணிப்பைப் பெறாது வெறுப்பைச் சம்பாதிக்கும் ஆசிரியரின் வகுப்பறைச் செயற்பாடுகள் தோல்வியில் முடிவடைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**11. சிறந்த இடைத்தொடர்பற்ற ஆசிரியர் :**

கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் வெற்றிபெறவேண்டமாக இருந்தால் வகுப்பறையில் கற்றலிலீடுபடும் மாணவர்களுக்கும் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியருக்கும் இடையே சுமுகமானதும் அபிவிருத்தி நோக்கியதுமான சிறந்த இடைவினைத் தொடர்பு காணப்பட வேண்டும் அவ்வாறில்லாத விடத்து வகுப்பறைச் செயற்பாடும் தோல்வியையே தழுவும்.

**12. வகுப்பறைக் கட்டுப்பாட்டைப் பேணமுடியாமை :**

சிறந்த ஆசிரியரானவர் தான் எடுத்துக் கொண்ட கல்வி நோக்கங்களை மாணவருக்கு வழங்கி வெற்றி காண்பதானது அவரின் வகுப்பறைக் கட்டுப்பாட்டிலேயே பெரிதும் தங்கியுள்ளது. இவ்வாறு வகுப்பறைக் கட்டுப்பாடற்ற வகுப்பறைச் செயற்பாடுகள் தோல்வியே காண்கின்றன.

மேற்படி விவரங்களைத் தொகுத்து நோக்கின் வகுப்பறையில் கற்றல் - கற்பித்தற் செற்பாடுகள் தோல்வி அடைவதற்கான காரணிகளில் ஆசிரியரின்பங்கு புலனாகும்.

**செல்வி க.ஹாஞ்சனா**
கோவில்போரதீவு தெற்கு
பெரியபோரதீவு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவில்போரதீவு
# கண்ணகி அம்மன் ஆலய உற்சவம்



மட்டக்களப்பின் தென்பால் பட்டிருப்பு வெல்லாவெளி வீதியில் கோவிலும் தலங்களும் கொண்டு பசுமையான வயல் நிலங்கள் சூழ அழகுடன் காட்சி தரும் பழம்பதி கோவில்போரதீவு. சுமார் ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்ததும் சோழர் காலத்தில் கட்டப் பட்டதும் குளக் கோட்டனால் திருப்பணிகள் செய்யப் பட்டதுடன் கிழக்கின் திருப்படை ஆலயங்களுள் ஒன்றாக மிளிரும் ஸ்ரீ சித்திர வேலாயுதர் ஆலயமே இவ்வூர் கோவில் போரதீவு எனப் பெயர் பெறக் காரணமா யிற்று. சித்திரவேலாயுதர் ஆலய வீதியைச் சார்ந்ததாக கோவில் கொண்டு, அருள் பாலித்து நிற்பவள் அருள் மிகு கண்ணகி அம்மன்.

சேரநாட்டுப் பண்பாட்டின் செவ்விய நெறிக்குள் தங்களைக் காலம் காலமாக இணைத்துக் கொண்டு வாழ்ந்து வருபவர்கள் மட்டக்களப்பு வாழ் தமிழ் மக்கள். இதன் காரணமாகவேதான் சேரத்தில் வழிபடு தெய்வமாக அன்று மதிக்கப்பட்ட கண்ணகியும் மட்டக்களப்பு பிரதேசத் தமிழர்களின் வழிபாட்டுக்கு உரியவளானாள். வருடந் தோறும் வைகாசிப் பௌர்ணமியை ஒட்டிய பத்து நாட்கள் வரை கண்ணகிக்கு எடுக்கப்படும் பெருவிழாவே இப்பிரதேச மக்களின் வசந்த விழா எனலாம். கோவில் போரதீவில் கோவில் கொண்டு அருள் பாலிக்கும் கண்ணனி அம்மனின் கால வரலாறு குறித்துச் சரியாகக் கூறுமுடியாது போனாலும் கி.பி. 17 அம் நூற்றாண்டுக்கு முற்பட்டதான வழிபாட்டுச் சிறப்பினை அது கொண்டிருப்பது தெரிகின்றது.

வைகாசிப் பூரணைக்கு ஒன்பது நாட்களுக்கு முன்னதாக திருக்கதவு திறத்தலுடன் ஆலய உற்சவம் ஆரம்பமாகும். இதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னதாக ஊர்ச்சபை ஆலய முன்றலில் கூடி விழா நிகழ்வுகள் குறித்து ஆராயும். இதற்கான முறையான அறிவித்தல் ஒரு வாரத்திற்கு முன்னதாக கிராமத்தின் மூலை முடுக் கெல்லாம் சென்று அறிவிக்கப்படும். கிரமாத்திலுள்ள அனைத்து இருபத்தியொரு பாகை குடிமக்களின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொள்ளுவார்கள்.

படையாட்சி குடித் தலைவரே கோவில் தலைவராகவும் சபையின் தலை வராகவுமிருப்பார். விழா நடைமுறைகளும் ஊற்சவ கால ஊர்க்கட்டுப்பாட்டு முறைக ளும் அங்கு தீர்மானிக்கப்படும். திருக்கதவு திறந்து திருக்குளிர்த்தி இடம்பெறும் பத்து நாட்களும் புலால் உண்ணுதல், மது அருந்துதல் அவற்றை ஊருக்குள் கொண்டு வருதல் என்பவை முற்றாகத் தடை செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவும் ஊர்த் தண்டக்காரர் மூலம் பொது மக்களுக்கு முறையாக அறிவிக்கப்படும். அவ்வறிவித்தல் கிடைத்ததும் கிராமத்தில் அனைத்து வீதிகளின் இருபக்கமும் குடியிருப்பவர் களால் புல்பூண்டுகள் அகற்றி துப்பரவு செய்யப்படுவதோடு வீடு வாசல்களும் தூய்மைப்படுத்தப்படும்.

திருக்கதவு திறந்து அம்மனை குளிர்ந்தருளப் பண்ணும் திருக்குளிர்த்தி பாடும் வரையான 9 நாட்களும் ஆலயத்தில் இரு நேரப்பூசையும் காலை தொடக்கம் மாலை வரையும் கண்ணகி வழக்குரைக் காவியம் பாடுதலும் இடம்பெறும். இதற்கான ஒரு பழமையான ஏடு இவ் ஆலயத்தில் நடைமுறையி லுள்ளது. 3ம் நாள் தொடக்கம் 7ம் நாள் வரையான 5 நாட்களும் மாலை தொடக்கம் நள்ளிரவு வரையும் ஊர்க்காவல், மனைக்காவல் இடம்பெறும். இதில் அம்ம னாக அபிநயிக்கும் ஆலய பூசகர் அம்மனுக் குரிய ஆடையணிகளை அணிந்து கும்ப குடம் ஏந்தி உடுக்கை ஓசை முழங்க ஊர்ச் சுற்றுக்காவியம் பாடிப் பெரும் பவனியாக ஊர்வலம் வரும் காட்சி ஊரைக் குதுகலத்தில் ஆழ்த்தும்.

தங்கள் தங்கள் இல்லங்களுக்கு முன்னால் அலங்காரப் பந்தலிட்டு கும்ப குடமும் குத்துவிளக்கும் வைத்து அம்மனின் பாதங்களை மஞ்சள் நீரால் கழுவி, பூச்சொரிந்த கற்பூர ஆரத்தி யெடுத்து வணங்கி ஊரார் ஆசி பெறுவர். அதனைத் தொடர்ந்து ஆலய முன்றலில் உள்ளூர் கலைஞர்களின் கும்மி கோலாட்டம் கரகம் பொன்ற நிகழ்ச்சிகளும் இறுதி இரு நாட்களும் முன்னாலுள்ள கலையரங்கத்தில் பிரமாண்டமான கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

ஏழாம் நாள் இடம்பெறும் மீனாட்சிக் கட்டுப்பிள்ளையார் ஆலயத்திற்கு அம்மன் எழுந்தருளல் மற்றும் கன்னிக்கால் வெட்டுதல் அம்மனின் திருமணச்சடங்கு மற்றும் பொன்னூஞ்சல் விழாவும் தொடர்ந்து எட்டாம் நாளிரவு கண்ணகி அம்மன் மதுரையை எரித்ததை நினைவு கூரும் தீ மிதித்தல் வைபமும் பத்தாம் நாள் அதிகாலை விநாயகப் பானை வைத்தலுடன் ஆலய வீதியில் நூற்றுக்கணக்கில் ஊரார் பொங்கலிட்டு அம்மனுக்குப் படைப்பதும் தொடர்ந்து குளிர்த்திபாடி அதன் பின்னர் குழந்தைகளை அம்மனுக்கு விற்று வாங்குதலும் குறிப்பிடத்தக்க சிறப்பு நிகழ்வாகும்.


மேலும் விழாக் காலங்களில் அன்னதானம் வழங்குதலும் நீண்ட காலமாகத் தொடர்ந்து இடம்பெறுவதையும் இதில் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

**க. தணிகாசலம்** JP
பாடசாலை வீதி,
கோவில் போரதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் தொண்டாற்றி வரும் நிறுவனங்கள்



"இயற்கையான சகஜ வாழ்க்கையொன்றை நடத்துவதற்கு ஒரு மனிதனுக்கு தேவைப்படுகின்ற அடிப்படை உரிமைகளே மனித உரிமைகளாகும்" என நாம் மனித உரிமைகள் பற்றி விளக்க முடியும்.

உயிர் வாழும் உரிமை, மனச்சாட்சியை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் உரிமை, வாக்களிக்கும் உரிமை, குறிப்பிட்ட மொழியினை, சமயத்தினை, கலாசாரத்தினை பின்பற்றும் உரிமை, பேச்சுரிமை, கூட்டங்கூடும் உரிமை, சுதந்திரமாக சிந்திக்கவும் எண்ணங்களை வெளிப்படுத்துவதற்குமான உரிமை, ஆட்களுடன் சேரவும் கூட்டமாக வாழவுமான உரிமை, உரிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் தனித்துவமாக கருமமாற்றுவதற்கான உரிமை, போன்றனவற்றை மனித உரிமைகளுக்கான சில உதாரணங்களாக கூறலாம்.

இவ்வாறான மனித உரிமைகள் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு தனி நபர்களாலும் நிறுவனங்களாலும் அமைப்புக்களாலும் அரசுகளாலும் மறுக்கப்பட்டும் பறிக்கப்பட்டும் மீறப்பட்டும் வந்துள்ளமையானது மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய தேவையினை உண்டு பண்ணியது.

ஹிட்லர், முசோலினி, இடி அமீன் போன்ற ஆட்சியாளர்களும் முதலாம், இரண்டாம் உலகப் போர்களும் அவற்றிலீடுபட்ட நாடுகளும் அவற்றின் தலைவர்களும் பயங்கரவாத அமைப்புகளும் அவற்றின் தலைமைகளும் இம்மனித உரிமை மீறல்களை புரிந்தவையாக வரலாற்றில் பதிவாகி உள்ளன.

இவ்வாறாக மீறப்படுகின்ற அல்லது மறுக்கப்படுகின்ற மனித உரிமைகளைப் பேணி பாதுகாப்பதற்கான பெரும் பொறுப்பினையும் கடப்பாட்டினையும் அரசு தன்னகப்படுத்த வேண்டிய ஏற்படுகின்றது. தவிரவும் சர்வதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் இதற்காக பல்வேறு அமைப்புகளும் உருவாக்கம் பெற்று செயற்படவும் வேண்டிய தேவையும் ஏற்பட்டன.

அந்த வகையில் சர்வதேச மட்டத்திலான மனித உரிமைகளை எமது நாட்டு மக்களும் அனுபவிக்கும் வகையில் அவை இலங்கைச் சட்டங்களுள் இடம் பெற்றிருக்கின்றன. குறிப்பாக நாட்டின் அதியுயர் சட்டமாகிய அரசியலமைப்பினுள் இவை இடம்பெற்றுள்ளன. எமது நாட்டின் 1972ம் ஆண்டு அரசியலமைப்பிலும் 1978ம் ஆண்டு அரசியல் அமைப்பிலும் "அடிப்படை உரிமைகள்" என்ற வகையிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் 1972ம் ஆண்டில் அரசியல் அமைப்பிலேயே முதல் தடவையாக அடிப்படை உரிமைகள் சேர்த்துக் கொள்ளப்பட்டன. அதன் IVம் அத்தியாயத்தின் 18ம் உறுப்புரையின் கீழ் அடிப்படை உரிமைகள் மற்றும் பூரண சுதந்திரம் என்னும் தலைப்பில் பிரிவொன்று உள்ளடக்கப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் சட்டத்தின் முன்னிலையில் சமத்துவமும் சட்டத்தின் சமனான பாதுகாப்பும் சட்டத்தின் உரிய செயன்முறை மூலமன்றி எந்த நபரினதும் உயிர் சுதந்திரம் அல்லது பாதுகாப்பு இல்லாமற் செயற்படலாகாது. சட்டப்பிரகாரமாகவன்றி எவரும் கைது செய்யப்படவோ சிறையில் அடைக்கப்படவோ கூடாது. சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சிக்கு ஏற்றவிதத்தில் செய்யப்படும் சுதந்திரம் மற்றும் மத சுதந்திரம் தனியாக அல்லது ஏனையோருடன் இணைந்து தமது கலாசாரத்தை அனுபவிக்க மற்றும் முன்னேற்றும், சுதந்திரம் சமாதானமாக ஒன்று கூடும் சுதந்திரம் முதலியன குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த உரிமைகளை அனுபவிக்கும் போது தேசிய ஐக்கிய மற்றும் ஒருமைப்பாடு, தேசிய பொருளாதாரம், பொதுமக்கள் பாதுகாப்பு, பொதுமக்கள் சமாதானம், பொதுமக்கள் சுகாதாரத்துக்கான பாதுகாப்பு என்பனவற்றின் அடிப்படையில் அவை மட்டுப்படுத்தப்படல் வேண்டம் என்பது அதில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

1978ம் ஆண்டில் கீழ் குறிப்பிடத்தக்க அடிப்படை உரிமைகள் அரசியல் அமைப்பின் IIIம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சியின் படி செயலாற்றும் சுதந்திரம் மற்றும் மத சுதந்திரம், சித்தரவதையிலிருந்து விடுபடும் சுதந்திரம், நியாயமாக நடத்தப்படும் உரிமையம் சட்டத்தின் சமனான பாதுகாப்பும் தன்னிச்சையாக கைது செய்யப்படாமலிருத்தல் மற்றும் கடந்தகாலங்களையும் உள்ளடக்கும் வகையிலான தண்டனைச் சட்டங்களிலிருந்து விடுபடுதல் சம்பந்தமான சுதந்திரம், மொழிப் பிரசுரம் மற்றும் கருத்து வெளிப்பாடுச் சுதந்திரம், சுதந்திரமாக ஒன்று கூடும் சுதந்திரம், நிறுவனம் அமைக்கும் சுதந்திரம் என்பன கூறப்பட்டுள்ளன.

மேலும் தொழிற்சங்கங்கள் அமைக்கும் சுதந்திரம், அவற்றில் அங்கத்தவராக இணையும் சுதந்திரம், மத சுதந்திரம், கலாசாரத்தை அனுபவிக்கும் சுதந்திரம், தொழிலொன்றை செய்யும் சுதந்திரம், இலங்கையினுள் பிரயாணம் செய்யும் சுதந்திரமும் வசிக்கும் சுதந்திரமும் மீண்டும் இலங்கைக்கு திரும்புவதற்கும் வாழ்வதற்குமான சுதந்திரம் முதலானவற்றை மேற்படி அத்தியாயத்தின் 10ம் உறுப்புரை வரையிலுமான பகுதிகளில் கூறப்பட்டுள்ளன.

1972ம் ஆண்டு அரசியல் யாப்பில் கூறப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறப்பட்ட சந்தர்ப்பங்களில் நிவாரணத்தை நாடி மாவட்ட நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பாக அறியமுடிவதுடன் 1978ம் ஆண்டு அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்படின் அல்லது மீறப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமை காணப்படின் பாதிப்புற்றவர் அல்லது மீறப்படும் நிலைமை காணப்படின் பாதிப்புற்றவர் அல்லது பாதிப்புறவிருப்பவர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நிவாரணத்தை பெற்று கொள்வதற்கான ஏற்பாடுகள் இவ்வரசியலமைப்பின் 17வது உறுப்புரையில் எடுத்துரைக்கப்பட்டிருப்பதும் நோக்கற்பாலது.

1978ம் ஆண்டு அரசியல் யாப்பின் 4(இ) உறுப்புரையின் பிரகாரம் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அரசியலமைப்பு ரீதியாக பொறுப்பு அரச அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலே கூறப்பட்டுள்ள மனித உரிமைகளையும் அவை மீறப்படும் போது அவற்றை பேணிப் பாதுகாக்கும் வகையிலும் அரசியலமைப்பில் விசேட ஏற்பாடுகள் இடம் பெற்றுள்ளமையை இதுவரை கண்ட நாம் அவ்வரசியலமைப்பிற்குட்பட்டு தொண்டாற்றி வரும் நிறுவனங்களையும் சுருக்கமாக அவதானித்தோம். இருந்த போதிலும் அவற்றில் மிகவும் முக்கியமானவையாக அரசியலமைப்பின் IIIம் அத்தியாயம் மூன்று அமைப்புகளை சுட்டி உரைக்கின்றது.

அவற்றில் ஒன்று உயர் நீதிமன்றம் ஆகும். மற்றையது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு. அடுத்தது நிருவாக நடவடிக்கைகள் சம்பந்தமான பாராளுமன்ற ஆணையாளர் (ஓம்புட்ஸ்மன்) என்பனவாகும். இவை தவிர தேசிய பொலிஸ் ஆணைக்குழு, இணைக்கசபை, கடன் நிவாரண சபை, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, மத்திய சூழல் அதிகார சபை, சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம், அரசகரும மொழிகள் ஆணைக்குழு போன்றனவும் இலங்கையில் மனித உரிமைகளை பேணிப்பாதுக்கும் வகையில் அரசியல் யாப்பு சட்ட விதிகளுக்கமைய அமைக்கப்பட்டு தொண்டாற்றி வருவனவாகும்.
இவை எவ்வாறு மனித உரிமைகளை பேணிப்பாதுகாக்கும் வகையில் தொண்டாற்றி வருகின்றன. என்பதை அவதானித்தல் பொருத்தமாகும் அந்தவகையில்

## 1. உயர் நீதி மன்றம்:

அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட அடிப்படை உரிமைகள், தான் சம்பந்தப்பட்ட மட்டில் எதற்கூடாக மீறப்பட்டுள்ளனவோ ஏதிர்பார்க்கும் நிவாரணம் தொடர்பான கோரிக்கையை உயர்நீதிமன்ற விதிமுறைகளுக்கமைவாக மனுமற்றும் சத்தியக் கூற்று என்பவை மூலமாக சமர்ப்பிப்பதன் மூலம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் முறைப்படி திருத்தியமைத்தல் நட்டஈடு வழக்குச் செலவுத் தொகையினை வழங்குதல் என்றவாறான நிவாரணங்களை வழக்குத் தீர்ப்பு மூலம் பெறலாம்.

## 2. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு:

1996ம் ஆண்டில் 21ம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் இது நிறுவப்பட்டது. மனித உரிமைகள் மீறப்படுதல் குறித்தமுறைப்பாடுகளை பரிசீலித்து விசாரணை மேற்கொண்டு இருதரப்பினரிடையிலும் இணக்கம் ஏற்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படும். அவ்வாறு இணக்கம் ஏற்படாத சந்தர்ப்பங்களில் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளனவா என்பதனைப் பரிசீலித்து உரிய விதந்துரைப்பவைகளை வழங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர முறைப்பாடுகள் எதுவும் செய்யப்படாவிடினும் மனித உரிமைகள் ஆணைக்குழு சுயமாக அதில் தலையிட்டு நிறைவேற்ற அல்லது நிருவாக நடவடிக்கைகள் மூலம் இடம் பெறும் அடிப்படை உரிமை மீறல் சம்பந்தமாக விசாரணை செய்து விதந்துரைப்புகளையும் வழங்கக் கூடிய அதிகாரமும் கொண்டது.

### 3. நிருவாக நடவடிக்கைகளுக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஓம்புட்ஸ்மன்):

அரச அதிகாரிகள் மூலம் அல்லது அரச கூட்டுதாபனங்கள் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலம் அல்லது அத்தகைய ஏனைய அமைப்புக்களின் அதிகாரிகள் மூலம் இடம்பெறும் அடிப்படை உரிமை மீறல்கள் அல்லது ஏனைய அநீதியான செயற்பாடுகள் சம்பந்தமாக ஓம்புட்ஸ்மனுக்கு முறைப்பாடு செய்யலாம். 1981ம் ஆண்டில் 17ம் இலக்க நிருவாக நடவடிக்கைகள் சம்பந்தமான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தில் ஓம்புட்ஸ்மனின் அதிகாரங்கள் மற்றும் கருமங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஓம்புட்ஸ்மனுக்கு கிடைக்கும் முறைப்பாடு சம்பந்தமாக உரிய அரச நிறுவனத்தின் அதிகாரிகள் அழைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படடும். இங்கு சட்டரீதியான அம்சங்களை விட நீதி மற்றும் நியாயம் தொடர்பான எண்ணக் கருக்களே முக்கியத்துவம் பெறும். இதன் பிரகாரம் விசாரணை முடிவில் முறைப்பாடு செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் அந்த அரச நிறுவனத்தால் மீறப்பட்டுள்ளமை தெரியவந்தால் குறிப்பிட்ட அரச நிறுவனத்துக்கு எதிராக ஓம்புட்ஸ்மன்னால் விதந்துரைப்புக்கள் செய்யப்படும்.

ஓம்புட்ஸ்மன்னின் இந்த விதந்துரைப்புகளுக்கு குறிப்பிட்ட நிறுவனம் இணங்கி ஒழுகுதல் கட்டாயமாகும். அவ்வாறு விதந்துரைப்புக்களை நிறைவேற்றாத சந்தர்ப்பங்களில் ஓம்புட்ஸ்மன் அது குறித்து ஜனாதிபதிக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி வைப்பார்.

### 4. தொழிலாளர் நியாய சபை :

சேவையை முடிவுறுத்துதல், பணிக் கொடை பெற்றுக் கொள்ளுதல் என்பனவற்றில் ஏற்படும் பிரச்சனைகள் சம்பந்தமாக தொழிலாளர் நியாய சபைக்கு முறைப்பாடு செய்வதன் மூலம் நிவாரணத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

### 5. இணக்க சபை:

தனிப்பட்ட தரப்பினர்களிடையே ஏற்படும் சிவில் உரிமைகள் சம்பந்தமான சிறு தகராறுகள் மற்றும் சிறு தவறுகளை தீர்த்தக் கொள்வதற்க இணக்க சபைகள் உதவுகின்றன.

எனவே இலங்கையில் மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் பல்வேறு நிறுவனங்கள் இலங்கை அரசியலமைப்புக்குட்படத் தோன்றி தொண்டாற்றி வருகின்றமை இக்கட்டுரைக் கூடாக புலப்படுத்தப்படுகிறது.

**க. டினுக்சனா**
விநாயகர் வீதி, கோயில் போரதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மாலையானால் வருகிறாய்



மேக மெனும்திரையினுள்
ஓடுகின்ற வெண்ணிலா
வெட்கப்பட்டுக் கொள்ளாமல்
இறங்கிவா என்னிடம்

வேகமாக விண்ணில்
உலாவுகின்ற ஆசையோ
வெண் மதியே விண்ணை விட்டு
சீக்கிரம் இறங்கி வா

நட்சத்திரத் தோழிகள்
நான்கு பக்கம் சூழ்ந்திருப்பதால்
வட்ட நிலா இங்கு நீயும்
வரமாட்டேனென்கிறாய்



தொட்டில் மழலை அழைக்குது
தொட்டு விளையாடிட
வட்ட நிலா இங்கு நீயும்
வர நீயேன் மறுக்கிறாய்.

மின் ஒளியின் தடைகளோ
விடியும் வரை யிருக்குது
விண்ணிலே இருந்து கொண்டு
மின்னொளியைத் தருகிறாய்

காலையானால் மறைகிறாய்
மாலை வந்தால் வருகிறாய்
காத்திருந்து உன் வரவை
கண்டவுடன் மகிழ்கின்றோம்

பாலைப் போன்ற ஒளியினை
பகிர்ந்து உலகில் தருகின்றாய்
நீலச் சேலை கட்டி நீயும்
நிமிர்ந்து எங்கே செல்கிறாய்?

**கூழாவடியான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோரைப் பேணுவோம்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது ஆன்றோர் வாக்கு எம்மை பெற்றெடுத்து பாதுகாத்து சீராட்டி பாராட்டி வளர்த்த தெய்வம் என்றால் அது எம் தாய் தந்தையே ஆகும்.


நாம் எதை வேண்டும் என்று கேட்கிறோமோ! அதை இல்லை என்று சொல்லாமல் வாங்கித் தருவார்கள் எம்மை பேணி பாதுகாத்து எடுத்த தெய்வங்களை நாம் தேியோர் என்கின்றோம்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில் முதலில் டிம்மை பெற்றெடுத்த அம்மாவுக்கும் பிறகு அப்பா பிறகு ஆசிரியர் கடைசியாகத்தான் கடவுள் இப்படியான தெய்வத்தை நாம் நேசிக்க வேண்டும்.

தாயிற் சிறந்த கோயிலும் இல்லை தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்று பார்த்தால் எம் கண்கண்ட தெய்வத்தை முன்னோர் வழிபட்டு வந்தனர்.

எமக்கு நோய் என்று வந்தால் கண்விழித்து அருகில் இருந்து உணவு ஊட்டுவர். அவர்களுக்கு துன்பம் வரும் போது அவர்களுக்கு துன்பம் வரும் போது நாமும் அவர்களுக்கு துணையாக இருக்க வேண்டும்.





இந்த நவீன கால கட்டத்தில் தெருவிற்கு தெரு, மூலைக்கு மூலை என்று முதியோர் இல்லங்கள் திறக்கப் பட்டுள்ளன. விளம்பரமும் ஒட்டப் படுகின்றது.

பத்து மாதம் சுமந்து பெற்றெ டுத்த தாயை நல்ல நாள் பார்த்து, நல்ல நேரம் பார்த்து பிள்ளைகள் முதியோர் இல்லத்தில் சேர்த்து விடுகின்றார்கள்.

இந்த தெய்வங்களை வீட்டில் வைத்து பராமரிப்பது அவர்களுக்கு உணவு கொடுப்பது என்று நினைத்து அவர்களை முதியோர் இல்லத்தில் சேர்த்து விட்டு உல்லாச வாழ்க்கையை வாழும் பிள்ளைகளை அப்பாவம் விட்டு வைக்காது.

எம்மை வளர்த்து ஆளாக்கிய தெய்வங்களை கண்ணின் இரு மணிகள் போல் பாதுகாத்து அவர்களின் உள்ளங் களிலும் முகங்களிலும் மகிழ்ச்சியை காண வேண்டும்.

**ம.கிரிதரன்**
மட்/பட்/கணேஷா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடங்குகளும் சம்பிரதாயங்களும்

## 01. குழந்தைப் பருவம்:

"குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்" (குறள் - 66)

### அ. நாமகரணம் சூட்டுதல் - பெயர் வைத்தல்

குழந்தை பிறந்து 31ம் நாள் செய்யப்படுவது. பூமியில் பிறக்கும் குழந்தைக்கு முதன்முதல் நடாத்தப்படும் கிரியை. இதனை நமது கிராமங்களில் "மருங்கை" என்றும் குறிப்பிடுவர். 31 நாட்கள் வரை குழந்தையை வெளியில் கொண்டு செல்லக் கூடாது. குழந்தை பிறந்து 31ம் நாள் ஆசௌச கழிவு நடாத்தப்படும். இதனை 31ம் நாள் துடக்குக் கழித்தல் என்றும் கூறுவர். 31ம் வீட்டைச் சுத்தப்படுத்தி மஞ்சள் நீர் அல்லது சாணம் கலந்த நீரினால் வீடு வாசல்களுக்குத் தெளித்து வாசலில் ஒரு நிறைகுடம், குத்துவிளக்குகள் வைத்து அவ்விடத்தில் குழந்தைக்கு நாவிதரைக்கொண்டு பிறந்த முடியை இறக்கி குழந்தையை நீராட்டிப் புத்தாடை அணிவிப்பர். குருக்கள் அல்லது வேதியரை அழைத்து அவர் முன்னிலையில் பின்வருவனவற்றை வைக்க வேண்டும்.

தேவையான பொருட்கள்:-

நிறைகுடம் (நீர் நிரப்பிய குடம், முடியுடன் தேங்காய், மாவிலைகள் 05, தலை வாழையிலை அல்லது தாம்பாளம், நெல் அல்லது பச்சையரிசி, குத்து விளக்கு, எண்ணெய், திரி, பூமாலை, விபூதி, சந்தணம், மஞ்சள், குங்குமம், பன்னீர், மஞ்சளில் பிடித்த பிள்ளையார், சாம்பிறாணி, கற்பூரம், பாக்கு, வெற்றிலை, பழம், எழுமிச்சம் பழம், மஞ்சள்துண்டு, பழத்தட்டு, பூத்தட்டு, பசுப்பால், கற்கண்டு, அறுகம்புல், தட்சணை என்பன.

வீட்டுப் பொருட்கள், உடைகள், உபயோகிக்கும் பொருட்கள் யாவும் கழுவிய சுத்தம் செய்தபின், வீட்டிலுள்ளோர், குழந்தை உட்பட யாவரும் தோய்த்துச் சுத்தமாகிய பின் வேதியரை அழைத்து வந்து புண்ணியாக வாசனம் செய்வர். மந்திரம் ஓதிய நீரை அங்குள்ளோர் மீதும், வீடு, வாசல், ஏனைய பொருட்கள் மீதும் தெளிப்பது வழக்கம். இதனைத் துடக்குக் கழித்தல் என்பர்.

துடக்குக் கழித்த பின்பு குழந்தைக்குப் பெயர் சூட்டுதல் மரபாகும். பிராமணருக்கு பிள்ளை பிறந்து 12ம் நாளும், சத்திரியருக்கு 16ம் நாளும், வைசியருக்கு 22ம் நாளும், சூத்திரருக்கு 32ம் நாளும் நாமகரணம் சூட்டுதல் மரபாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதியர் குழந்தையின் நட்சத்திரத்தை சொல்லி பூஜை செய்த பின்பு தாய்மாமன் அல்லது தாய் அல்லது வீட்டில் உள்ள பெரியவர் ஒருவரின் மடியில் குழந்தையை இருத்தி அதன் பெயரை வலது காதில் மூன்று முறை ஓதிக் குழந்தைக்கு கற்கண்டு தண்ணீர் பருக்குவர். இதன் பின்பு குழுமியிருப்போருக்கு இனிப்புப் பானம் வழங்குதல் வேண்டும். இதன் பொருள் வம்சத்தில் தோன்றியுள்ள குழந்தை இறைவன் அருளால் பெயரும் வாழ்வும் பெற்று பிரகாசிக்க வேண்டும் என்பதாகும். (முற்காலத்தில் குழந்தையின் பெயர் நட்சத்திரப்படியும் தம் வம்சத்திலுள்ள சிறந்த மூதாதையரின் நாமங்களையும் தங்களுக்கு விருப்பமான இறைவனின் பெயரையும் கொண்ட பெயர் சூட்டினர். அதன் பின்பு இடைக்காலத்தில் எண் சோதிட முறைப்படியும் தற்காலத்தில் பெயருக்கும் பொருள் அர்த்தம் இல்லாமலும் தங்களது விருப்பத்திற்கேற்ப நாமகரணங்கள் சூட்டப்படுகின்றது.)

இதன் பின்பு இனபந்தங்கள் குழந்தையின் பெயரை ஒவ்வொருவராகக் காதில் ஓதுவர். பெற்றோர் உற்றார் சுற்றம் சூழக் குழந்தையின் பெயரை மனம் நிறைந்த மகிழ்வுடன் எல்லோரும் அழைத்து மகிழ்வர். குழந்தை அன்றுதான் முதன்முதலாக அப்பெயரால் எல்லோராலும் அழைக்கப்பட்டு இறைவன் திருவருளால் ஆசிர்வாதம் பெற்று அப்பெயருக்கு உரியவராகின்றார்.

இந்நிகழ்வைக் குழந்தைக்கு நாமகரணம் சூட்டுதல் அல்லது பெயர் வைத்தல் சடங்கு என்போம். இதன் பின்பு வேதியருக்குத் தானம் தட்சணை கொடுக்க வேண்டும். இதே நாளில் குழந்தைக்கு அரை ஞாண் கட்டுதல், பஞ்சாயுதச்சங்கிலி, பஞ்சலோகத்தினாலான காப்பு, கால் சங்கிலி போன்றவையும் அணிவிக்கலாம். (பஞ்சலோகம் - தங்கம், வெள்ளி, செப்பு, இரும்பு, பித்தளை)

ஒரு தட்டில் பச்சை அரிசியைப் பரவி வாழைப்பழம், மஞ்சள், குங்குமம், பாக்கு, வெற்றிலை, தேசிப்பழம் வைத்து அதில் குழந்தைக்கு அணிவிக்கும் நகைகளையும் வைத்து தகப்பன் அல்லது தாய்மாமன் அக்குழந்தைக்கு அணிவிப்பார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ. திருஸ்டிப் பொட்டு வைத்தல் (கறுத்தப் பொட்டு):

குழந்தைகள் என்றால் பொதுவாக எல்லோருக்கும் கொள்ளை ஆசை. அவர்களின் சிரிப்பு, அங்க அசைவுகள், அழகான பார்வை, கதை, பேச்சு இவைகளினால் நாம் கவரப்பட்டு அக் குழந்தைகளில் அன்பு செலுத்துகின்றோம். இப்படி இருக்கும் போது ஒரு சிலரின் பார்வை, பேச்சு (குழந்தைகளைப் பற்றியது) அப்பிள்ளைகளுக்கு ஊறு விளைவிப்பவையாக அமையலாம். அதாவது கண்ணூறு, நாவூறு. இதனால் குழந்தை சோர்ந்து போய் இருக்கும். அல்லது எப்பொழுதும் அழுது கொண்டே இருக்கும். இவைகளைப் போக்குவதற்கு திருஸ்டிப் பொட்டு வைத்தல், இரும்பு சுற்றி போடுதல் என்னும் இரு முறைகளை நமது கிராமங்களில் வழக்கத்தில் உள்ளன.

### திருஸ்டிப் பொட்டுச் செய்யும் முறை :-

100g சவ்வரிசி அல்லது அரிசிக் குறுணியை ஒரு தாச்சியில் இட்டுக் கறுப்பு நிறமாக வரும்வரை வறுக்க வேண்டும். பின்பு அதற்குள் தண்ணீர் விட்டு மல்லிகை, ரோசா போன்ற வாசமுள்ள மலர்களையும் வாசனைப் பவுடர் போன்ற திரவியங்களையும் சேர்த்து இக் கரைசலை பின்பு ஆறவைத்து ஒரு துணியினால் வடித்தெடுத்து, இக்கரிக் கூழை நன்றாகச் சீவியெடுத்த சிரட்டையில் அல்லது கிண்ணத்தில் ஊற்றி வெய்யிலில் நன்றாகக் காயவைத்துக்கொள்ள வேண்டும். காய்ந்த இப்பொட்டை தினமும் சிறிதளவு நீர் விட்டு உரைத்துப் பிள்ளைகளின் நெற்றியில் இடலாம். சிலர் குழந்தையின் சொக்கிலும் தற்போது இடுகின்றனர். இப்படி இடுவதனால் திருஸ்டி கழியும் என்ற நம்பிக்கை இந்துக்களுக்கு உண்டு. தற்போது இதனை சிங்கள மக்களும் கடைப்பிடிக்கின்றனர்.

### 41ம் நாள்:

குழந்தை பிறந்து தொடக்குக் கழித்த பின்பு 41ம் நாள் தாயையும் குழந்தையையும் அவர்கள் வசிக்கும் கிராமத்திலுள்ள ஆலயத்திற்கோ அல்லது அப்பகுதியில் பிரசித்தி பெற்ற ஆலயத்திற்கோ கூட்டிச் சென்று குழந்தையின் நட்சத்திரத்தைச் சொல்லி அர்ச்சனை செய்து இறைவனை வழிபட வேண்டும். கோவிலுக்குச் செல்லும் போது அர்ச்சனைப் பொருட்களை ஒரு தட்டில் வைத்துக் கொண்டு செல்ல வேண்டும். (வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், பூக்கள், கற்பூரம், ஊதுபத்தி, பச்சையரிசி என்பன). சிலர் சில இடங்களில் பொங்கல் பூசை செய்தும் வழிபடுகின்றனர். குழந்தையை சுவாமி சன்னிதானத்தின் (கற்பக்கிரகம்) முன்னிலையில் வளர்த்தி எடுப்பதும் வழக்கம்.

## இ. காது குத்துதல் சடங்கு (கர்ணவேதனம்):

குழந்தை பிறந்து 6ம், 7ம், 8ம், 10ம் மாதங்களில் காது குத்துதல் வைபவம் நடத்தப்படும். இதற்குப் பூசை கிரியைகள் செய்யப்படுவதில்லை. மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைத்து, நிறைகுடம் ஒன்றும் வைத்து வணங்கி வீட்டிலே இதனைச் செய்யலாம். தற்போது சிலர் கோவில்களிலும் வைத்துச் செய்கின்றனர். இது குழந்தைகளுக்கு ஏற்படும் அரிட்டதோசமாகவும் குத்தப்படுகின்றது. பொற் கொல்லர் ஒருவரை வீட்டுக்கு அழைத்து வந்து காது குத்திப் பெண்பிள்ளைகளுக்கு தோடு (ஆண்பிள்ளைகளுக்கு மின்னி அல்லது கடுக்கன் தங்கத்தால் அணிவது பழைய மரபாக இருந்தது) போடுவார்கள். தைப் பூசத்தில் வளர்பிறையில் இந்நிகழ்வு செய்வது மிகவும் சிறந்தது எனப் பெரியோர்கள் கூறுவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈ. அன்னப்பிரசாசனம் - சோறூட்டல்:

ஆண் குழந்தைகளுக்கு 6ம், 8ம், 10ம், 12ம் ஆகிய இரட்டை எண்ணுள்ள மாதங்களிலும் பெண் குழந்தைகளுக்கு 5ம், 7ம், 9ம், 11ம் ஆகிய ஒற்றை எண்ணுள்ள மாதங்களிலும் ஒரு சுப முகூர்த்தம் பார்த்து அரிசி, சீனி, சர்க்கரை, கற்கண்டு, நெய், பால் கொண்டு உப்பு நீக்கிய அமுது பொங்கி அப்பொங்கலை திருவிளக்கேற்றி பிள்ளையார் பூஜை செய்து அதன் பின்பு இது குழந்தையின் முதல் போசனமாதலால் தங்க மோதிரத்தால் அவ்வமுதைத் தொட்டு தந்தை மூன்று தடைவை எடுத்துக் குழந்தைக்கு ஊட்டிய பின்பு மற்றோரும் இவ்வாறு ஊட்டி நீண்ட ஆயுளுடனும் ஆரோக்கியத்துடனுன் வாழவேண்டும் என ஆசீர்வதிப்பர்.

## உ. முதல் பல் முளைத்தல்-பல்லுக் கொழுக்கட்டை சொரிதல்:

குழந்தைக்கு முதல் பல் முளைக்க ஆரம்பிக்கும் போது பல்லுக் கொழுக்கட்டை அவித்து சொரிதல் வேண்டும். வீட்டில் விளக்கேற்றி, மஞ்சளில் பிள்ளையார் பிடித்து, வெள்ளைத் துணி ஒன்றை விரித்து இறைவனை வழிபட்ட பின்பு அவ் வெள்ளைத் துணியை குழந்தையின் தலைமீது போட்டு ஒன்பது சிறிய கொழுக்கட்டைகளைத் தாய்மாமன் மாமி இருவரும் குழந்தையின் தலையில் கொட்டி குழந்தைக்கும் ஊட்டி உற்றார் உறவினர்களுக்கும் கொடுத்து உண்டு மகிழ்வார்கள். குழந்தைக்கு ஆரோக்கியமான பற்கள் முளைக்க வேண்டும் என்பதற்கும் இறைவனிடம் ஆசிபெறவும் இவ் வழிபாடு ஒரு கொண்டாட்டமாக நிகழ்த்தப்படுகின்றது. இதனால் குழந்தை சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ குழுமியிருக்கும் உறவினர்கள் ஆசீர்வதிப்பர்.

கொழுக்கட்டைக்குத் தேவையான பொருட்கள் :-

| | | |
|---|---|---|
| 01. | அரிசி மா | - 1 சுண்டு |
| 02. | அவித்த கோதுமை மா | - 1 சுண்டு |
| 03. | ஊடைத்த பயறு | - 200g (வறுத்து எடுக்கவும்) |
| 04. | சீனி / சர்க்கரை | - 200g |
| 05. | தேங்காய் | - 01 |
| 06. | ஏலக்காய்ப் பொடி | - சிறிதளவு |
| 07. | உப்பு அளவுக்கு | |

செய்முறை :-

வறுத்து எடுத்த பயறை அவித்து நீர்வடிய விட்டு ஆறவிடவும். ஆறிய பயறுக்குள் சீனி / சர்க்கரை, தேங்காய்ப்பூ, ஏலக்காய்ப்பொடி இவைகளைப் போட்டுக் கிளறி எடுக்க வேண்டும். அதன் பின்பு அரிசி மாவையும் கோதுமை மாவையும் ஒன்றாகச் சேர்த்து அளவுக்கு உப்பு விட்டு கொதி நீரும் விட்டுப் பிசைந்து சிறு சிறு உருண்டைகளாக்கி அவைகளைக் கிண்ணம் போல் செய்து பயறுத் தூவலையை அவற்றுள் வைத்து அரைவட்ட வடிவமாக்கி பல்லுப்போல் விளிம்பை செய்து நீராவியில் அவித்து எடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊ. வித்தியாரம்பம் / ஏடு தொடங்குதல் :

பண்டைக்காலத்தில் கல்வியை ஏட்டிலிருந்தே பெற்றுக் கொண்டனர். அதன் காரணமாகவே இன்றும் வாழ்க்கையில் முதன்முதலாக கல்வியை ஆரம்பிக்கும் போது "ஏடுதொடங்கல்" என்று கூறப்படுவது வழக்கமாகி விட்டது. இது மூன்று அல்லது ஐந்து வயதில் நடைபெறலாம். சுபவேளையில் பிள்ளையார் பூஜை செய்து வித்தியாரம்பம் செய்தல் வேண்டும். குழந்தைக்கு முதன் முதலில் கல்விகற்க ஆரம்பத்தில் பெரும்பாலும் நம்மவர்கள் "விஜயதசமி" எனப்படும் நவராத்திரி விழாவின் பூர்த்தி நாளன்றே மேற்கொள்வர்.

தைப்பூசத்தன்றும் தைமாதம் முதல் ஆனிமாதம் வரையிலான உத்தராயண காலப்பகுதியில் பிள்ளையின் நட்சத்திரத்திற்கு ஏற்றதாக அமைந்த சுபநாளிலும் செய்யலாம். தந்தை அல்லது ஆலய குரு அல்லது ஆசிரியர் யாரேனும் ஒருவர் இந்த வித்தியாரம்பத்தை மேற்கொள்வார்கள்.

கல்வியில் மேன்மையடையவே முதற்கல்வியை சுபநாளில் சுபநேரத்தில் செய்வது எமது மரபு. ஏடு தொடங்குவதை கோவிலிலும் செய்யலாம், பாடசாலையிலும் செய்யலாம், வீட்டிலும் செய்யலாம். ஒரு தட்டில் பூசைக்குரிய பொருட்களுடன் (பாக்கு, வெற்றிலை, பழம், முடித்தேங்காய், பச்சரிசி, கற்பூரம், ஊதுபத்தி, மஞ்சள், பூக்கள்,தட்சணை) இவைகளுடன் கோயிலுக்கு அல்லது பாடசாலைக்குச் செல்ல வேண்டும். கோயிலுக்கு செல்ல இயலாதவர்கள் தமது வீட்டில் பிள்ளையார் படத்தையோ மஞ்சள் அல்லது சாணத்தில் பிள்ளையார் பிடித்து வைத்தோ நிறைகுடம் விளக்கேற்றி வைத்து இறைவனை வணங்கி ஒரு தட்டில் அரிசியைப் பரப்பி அதில் குழந்தையின் கையைப் பிடித்து முதல் எழுத்தாகிய 'அ' அகரத்தை அதில் எழுதித் தொடங்கலாம்.

அரி ஓம் நம நன்றாகக் குரு வாழ்க
குரு நாதன் வாழ்க – என் குருவே துணை
ஆனை முகனே அரனார் திருமகனே
கான மதம் பாயுமொரு கையோனே
வித்தை கற்கும் பிள்ளைகட்கு
விக்கினங்கள் வராமல் நித்தம் நித்தம்
நீ துணையாய் நில்

- சுபம் -

**முத்துலிங்கம் பேரின்பராஜா**
பதவி நிலை உதவியாளர்,
பிரதேச செயலகம்,
வெல்லாவெளி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பே மனிதனின் சுவாசிப்பு


"கண்டது கற்க பண்டிதன் ஆவான்"
என்பது முது மொழி ஆகும்.

அதாவது நாம் எங்கெல்லாம் செல்கிறோமோ அங்கு இருக்கும் பொது விடயங்களை வாசித்தல் வேண்டும். இவ் இடங்களில் இருப்பவற்றை வாசித்தால் மட்டும் போதாது. அங்கு இருக்கும் சில நூலகங்களை, பூக்களை நாடி தேனீக்கள் வந்து தேனை எடுத்துச் சென்று தேனைச் சேகரிப்பது போல் எமது வாசிப்பினை நாடிச் சென்று சேகரித்தல் வேண்டும்.

நூலகத்தில் கதைப் புத்தகம், நாவல், சிறுகதை ஆகியவற்றை நாடிச் சென்று வாசித்தல் வேண்டும். அண்மையில் கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் புத்தக கண்காட்சி நடை பெற்றது. இந்த கண்காட்சி 3 நாட்கள் மட்டும் பார்வைக்காக காட்சிப்படுத்தி வைக்கப்பட்டது. இதனை பார்வையிடச் சென்ற மக்களும் அதிகளவாக குவிந்தனர். எமக்குத்தேவையான புத்தகங்களை நுகர்வு செய்து கொள்ளவும் மிக இலகுவாக இருந்தது.

நாம் வாசிக்க வாசிக்க எமது அறிவு ஊற்றெடுக்கின்றது. அதாவது ஆற்றங்கரையில் ஒரு கேணி ஒன்றை தோண்டும் போது நீர் சல சலவென்று ஊற்றெடுக்கின்றது. அதே மாதிரி வாசிப்பையும் ஊற்றெடுக்க வைக்க வேண்டும்.

"தொட்டனை தூறும் மணற்கேணி மாந்தற்கு
கற்றனைத் தூறும் அறிவு"



**பு.தினுஜா**
மட்/பட்/கணேஷா வித்தியாலயம்,
தம்பலவத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிகள் .......!

எமது பிரதேச கலாசார விழாவானது இவ்வருடம் கடந்த இரு ஆண்டுகளுக்கான "மருதம்" சிறப்பு மலர்களுடன் இவ் ஆண்டுக்கான மலரும் சேர்த்து மூன்று மலர்கள் ஒரே விழாவில் வெளியிடப்படுவது சிறப்பு அம்சமாகும். விழா துரிதமாக இடம் பெறுவதற்கு எமக்கு ஆலோசனைகளை வழங்கி, வழிகாட்டிய எமது பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி அம்மணி அவர்களுக்கு முதற்கண் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விழா தொடர்பான செயற்பாட்டினை நெறிப்படுத்தி, அவ்வப்போது ஆலோசனைகளை வழங்கிய உதவிப் பிரதேச செயலாளர் திரு. எஸ். புவனேந்திரன் அவர்களுக்கும்

விழா சிறப்பாக நடைபெறவும் மருதம் மலர் சிறப்புறவும் சகல வழிகளிலும் ஒத்துழைப்புக்களை வழங்கி பக்கத் துணையாக நின்ற கலாசார பேரவை உறுப்பினர்களுக்கும்

மருதம் மலரில் இடம் பிடிக்கும் ஆக்கங்களை தந்துதவிய எழுத்தாளர்கள் அதனை ஒழுங்கமைக்க உதவிய மலர்க்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும்

கலாசார விழாவின் போது கௌரவிக்கப்படவுள்ள கலைஞர்களை தெரிவுசெய்த கலைஞர் தெரிவுக் குழுவினருக்கும்

கலாசார ஊர்வலம், கலை நிகழ்வுகளுக்கான கலை நிகழ்ச்சிகளை தந்துதவிய பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பங்குபற்றிய மாணவர்களுக்கும்

விழா சிறந்த முறையில் நடைபெறுவதற்கு நிதி உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் மனமுவந்து வழங்கிய வர்த்தகர்கள், அமைப்புக்கள், சங்கங்கள், ஆலய நிருவாகங்கள் அனைவருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2016, 2017 ஆம் ஆண்டுகளுக்கான மருதம் சிறப்பு மலர்களை பதிப்புச் செய்வதற்குரிய நிதி அனுசரணையை வழங்கிய எமது பிரதேசத்தைச் சேர்ந்த லாவண்யா ஜுவல்லரி உரிமையாளர் திரு. செ. பாக்கியராஜா அவர்களுக்கும்

விழாவை ஒழுங்கமைப்பதற்கு பக்கத்துணையாக நின்ற விழாக் குழுவினர் மற்றும் எமது சக ஊழியர்களுக்கும்

விழாவைச் சிறப்பித்த விருந்தினர்கள், கலைஞர்கள், பொது அமைப்புக்களின் உறுப்பினர்கள், பொதுமக்கள் அனைவருக்கும்

மலரினை சிறந்த முறையில் அச்சுப்பதிப்பினை மேற்கொண்ட மாருதி அச்சகத்தாருக்கும்

**எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.**


**திரு.ச.சோமசுந்தரம்**
(கலாசார உத்தியோகஸ்தர்)
கலாசார பேரவை செயலாளர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org